bible educational services

# ஆசிரியருக்கான வழிமுறைகள்

## பைபிள் டைம் நிலை 1 & 2

### தொடர் A

பாடம் 1-6

bes INDIA
bible educational services
WWW.besweb.com

# ஆசிரியருக்கான வழிமுறைகள்

பைபிள் டைம் பாடங்கள் முதன் முதலில் அஞ்சல் வழி கல்வியாகவே அறிமுகம் செய்யப்பட்டாலும், அஞ்சல் வசதியல்லாத பகுதிகளில் இந்த பாடங்கள் அதிகமாய் பயன்படுத்தப்படுவதால் அஞ்சல் வழியிலேயே இப்பாடங்களை கற்றுத்தருவதில் அநேக சிக்கல்கள் உள்ளன. விசேசமாக ஆப்பிரிக்கா மட்டும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சபைகளில் மற்றும் பள்ளிகளில் இந்த சிரமம் உள்ளது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக இந்த ஆசிரியருக்கான வழிமுறைகள் உருவாக்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் உள்ள ஆசிரியருக்கான வழிமுறைகள் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பாடங்களுக்கானவை, அதாவது வயது 5-10 வரை உள்ள பிள்ளைகளுக்கானவை.

பைபிள் டைம் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் அதே வேதாகம பகுதியே இந்த ஆசிரியர் கையேட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடங்கள் வாராந்திர அடிப்படையில் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஏப்ரல் மாத பாடங்கள் ஈஸ்டரை பற்றியும், டிசம்பர் மாத பாடங்கள் கிறிஸ்துமஸ் பற்றியும் இருக்கும்.

சில பகுதிகளில் வாராந்திர பாடங்கள் யு 4 லும் சில பகுதிகளில் யு5 புத்தகத்தில் 24 பாடங்களும் கொடுக்கப்படும். பொதுவாக ஆசிரியர் சபையிலோ அல்லது பள்ளியிலோ வைத்து ஒரு பாடத்தைக் கொடுப்பார், அது வீட்டுக்கு எடுத்து செல்லப்பட்டு மறுவாரம் திரும்ப கொடுக்கப்படும். அந்த மாத முடிவில் எல்லா பாடங்களும் திரும்ப பெறப்பட்டு ஆசிரியரால் திருத்தப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும், பின்னர் திரும்ப மாண-வர்களிடம் கொடுக்கப்படும்.

புத்தகங்கள் சரியாக பயன்படுத்தப்பட்டால், ஒவ்வொரு வகுப்பு நேரம் முடிந்தவுடன், புத்தகங்கள் திரும்ப பெறப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும். பல நேரங்களில் அது சாத்தியப்படாது, எனவே அப்படிப்பட்ட நேரங்களில் மாணவர்களிடம் புத்தகங்கள் மாற்றி கொடுக்கப்பட்டு ஒவ்வொருவரும் தங்கள் நண்பனின் புத்தகத்தை திருத்தி மதிப்பெண் இடுவதற்கான இடம் உண்டு, மற்றும் மாணவரின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பு எழுதும் இடமும் உண்டு, புத்தகத்தின் கடைசியிலே 6 மாத கால மதிப்பெண் சதவீதத்தைக் குறிக்கவும் மாணவருக்குக் கொடுக்கும் படியான ஒரு சான்றிதழும் உண்டு.

## ஆசிரியருக்கான ஆயத்தம்

ஆசிரியருக்கு எந்த ஒரு சுதந்திரமுமில்லாமல் அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் இருக்க எங்களுக்கு மனதில்லை. கீழ்க்காணும் குறிப்புகள் பைபிள் டைம் புத்தகங்களை அதிக ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த உதவும்.

கதையை நன்றாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்: வேதாகம கதையையும் பைபிள் டைம் பாடத்தையும் ஆசிரியர்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பாடங்களை கற்றுக்கொடுக்கும் முன்னரே பாடங்களை ஆசிரியர்கள் செய்து முடித்திருக்க வேண்டும், பாடங்களை ஆயத்தம் செய்யும் போது வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும்: ஒவ்வொரு பாடத்திட்டத்தின் ஆரம்பத்தில் “நாம் கற்றுக்கொள்வது” என்கிற ஒரு பகுதி உண்டு அதன் கீழ் 2 குறிப்புகள் உண்டு. இவைகள் தான் பிள்ளைகள் அன்றைய நாளில் ஆசிரியர் பாடத்தை எடுத்து முடித்த பின்பும், பாடப்புத்தக வேலையை செய்து முடித்த பின்பும் மாணவர்கள் கற்றுக்கொள்ள போகிற விசயங்கள். முதல் குறிப்பு பிள்ளைகள் பாடத்தை புரிந்துகொள்ள உதவும், இரண்டாம் குறிப்போ பிள்ளைகளை சிந்திக்கச்செய்வதும், பின்னர் அதை கடைபிடிக்கவும் தீர்மானம் எடுக்கவும் உதவும். இந்த குறிப்புகள் அன்றைய நாளில் கற்றுக்கொடுக்கும் முக்கிய சத்தியத்தின் சிறு குறிப்புகளேயாகும். ஆசிரியர்களும் இந்த குறிப்புகளை தங்கள் தனிப்பட்ட வாழ்வில் ஒப்பிட்டு சிந்தித்துப் பார்க்கலாம்.

**அறிமுகப்படுத்தவும்:** ஒவ்வொரு பாடத்திலும் பிள்ளைகள் அந்த சூழ்நிலையில் இருக்கும் போது அவர்களின் அனுபவங்கள் எப்படியிருக்குமோ அதை வைத்தே பாடங்கள் துவக்கப்படும். பாடங்களை துவக்க பிள்ளைகளோடு கலந்து ஆலோசிக்க சில கருத்துக்களை நாங்கள் கொடுத்துள்ளோம்.

**கற்றுக்கொடுக்கவும்:** ஒவ்வொரு கதையிலும் முக்கிய புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த கதைகளை கற்றுக்கொடுக்கும் போது அதை ரசிக்கும் விதமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் கற்றுக்கொடுக்கவும் மற்றும் இந்த புத்தகத்தை பிள்ளைகள் முன்பாக திறந்து பார்க்காமல் முன்னதாகவே கதையை நன்கு அறிந்து போதிக்கவும் வேண்டும் என நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். பிள்ளைகள் கதையின் முக்கிய பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு தாங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தை நன்கு புரிந்து எடுக்க ஆசிரியர்கள் வாஞ்சிக்க வேண்டும். தேவைக்கு ஏற்றார் போல சில விளக்கங்களை நாங்கள் கொடுக்க முயற்சித்திருக்கிறோம். அவை இட்டாலிக்ஸ் வடிவிலே இருக்கும்.

**கற்றுக்கொள்ளவும்:** ஒவ்வொரு கதைக்கும் ஒரு முக்கிய வசனம் உண்டு. சில சமயங்களில் இரண்டு வசனங்களும் இருக்கும். மற்றொரு வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவை எப்பொழுதும் எளிமையாக கற்றுக்கொள்ளுகிற அளவிற்கே இருக்கும். வேதாகம முக்கிய வசனங்களை பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் அறிவிலே வளர்வதற்கு முக்கிய வசனங்களை அடிக்கடி ஞாபகப்படுத்துதல் அவசியம் என நாங்கள் நம்புகிறோம்.

**செய்து முடிக்கவும்:** ஒரு பள்ளியாக இருக்கும் பட்சத்தில், பிள்ளைகளுக்கு பாடத்தாள்களை செய்துமுடிக்கும் திறன் எவ்வளவு உண்டு என்பதையும், ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவு தேவை என்பதையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால், சில இடங்களில் ஆசிரியர் பாடப்பகுதியை சத்தமாக வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். சில பிள்ளைகள் தாங்களாகவே வாசித்துக்கொள்வார்கள். எவ்வித சூழ்நிலையானாலும் சரி, பிள்ளைகளின் கவனத்தை கட்டுக்குள் வைக்கவும், கேள்விகளை பற்றியக் குறிப்புகளை கவனிக்கவும் இதை செய்யலாம். பள்ளிக்கூடம் அல்லாத சூழ்நிலையிலே நீங்கள் பைபிள் டைமை பயன்படுத்துபவராயிருந்தால், நீங்கள் பிள்ளைகளோடிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், மற்றும் பாடங்களை செய்து முடிக்கும் போது மாணவர்களுக்கு அது சுமையாக இல்லாமல், தேர்வு போல இல்லாமல் சுவாரஸ்யமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

**நினைவில் கொள்ளவும்:** எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம், கேள்வி பதில்கள் மூலமாகவும், நடித்து காட்டுதல் மூலமாகவும், பாடங்களை நன்கு கற்றுக்கொள்ளவும், நினைவில் கொள்ளவும் உதவி செய்ய முயற்சி செய்திருக்கிறோம்.

## முக்கிய வசனங்களைக் கற்றுக்கொடுத்தல்:

கற்றுக்கொடுக்கப்படும் வசனத்தை ஒரு தாளிலோ அல்லது போர்டிலோ சில வார்த்தைகளை தவிர்த்து எழுத வேண்டும். பிள்ளைகள் வசனத்தை மீண்டும் மீண்டும் வாசிக்க செய்ய வேண்டும். அவர்கள் சொல்ல சொல்ல மீதி வார்த்தைகளை அழிக்க வேண்டும். கடைசியிலே எல்லா வார்த்தைகளையும் அழித்து முடிவதற்குள் பிள்ளைகள் முழு வசனத்தையும் கற்றுக்கொள்வார்கள்.

## முக்கிய வசனத்தைக் கற்றுக்கொடுக்க,

a) ஹெங்க்மேன் விளையாட்டை போல, வசனங்களின் எழுத்துக்களுக்கு பதிலாக கோடிட்ட இடம் இட வேண்டும். அந்த வசனத்தில் எழுத்துக்களை கீழே எழுத வேண்டும். பிள்ளைகள் கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான வார்த்தைகளை கவனித்து எழுத வேண்டும்.

b) வேதாகமத்தை பிள்ளைகள் கையில் கொடுத்து சொல்லும் வசனத்தை அவர்கள் கண்டுபிடித்து வாசிக்க செய்ய வேண்டும்.

## காலத்திட்டம்:

பாட ஒழுங்கு: ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் நடத்தும் ஒழுங்கை நாங்கள் தீர்மானித்துள்ளோம், ஆனாலும் ஆசிரியர்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் அதை மாற்றிக்கொள்ளலாம்.

முன்னுரையும், கதை கூறுதலும் - ஏறக்குறைய 15 நிமிடங்கள் முக்கிய வசனம் கற்றுக்கொடுத்தல் - 5-10 நிமிடங்கள் பாடத்தாள் வேலையை முடித்தல் - 20 நிமிடங்கள் வினா விடை மற்றும் இதர வேலைகள் - 5-10 நிமிடங்கள்

இந்த முக்கிய வாசகத்தை ஞாபகம் வைக்கவும்.

"சொல்லுங்கள் ஒருவேளை மறந்துவிடுவேன்
காட்டுங்கள் அதை நான் ஞாபகம் கொள்வேன்
செய்ய வையுங்கள் நான் புரிந்துகொள்வேன்"

## பைபிள்டைம் பாடத்திட்டம்

| | நிலை 0 (ப்ரீ-ஸ்கூல்)<br>நிலை 1 (5-7 வயது)<br>நிலை 2 (8-10 வயது) | நிலை 3 (11-13 வயது) | நிலை 4 (14+ வயது) |
|---|---|---|---|
| தொடக்கநிலை தொடர்பாடங்கள் | 1. தொடக்கப்பாடம் – அறிமுகம்<br>2. U1 – லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 – லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 – லூக்காவின் சுவிசேஷம் | 1. தொடக்கப்பாடம் – அறிமுகம்<br>2. U1 – லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 – லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 – லூக்காவின் சுவிசேஷம் | 1. தொடக்கப்பாடம் – அறிமுகம்<br>2. U1 – லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 – லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 – லூக்காவின் சுவிசேஷம் |
| தொடர் A | 1. சிருஷ்டித்தல்<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு – சிலுவை<br>5. ஆபிரகாம்<br>6. ஆபிரகாம்<br>7. பேதுரு<br>8. பேதுரு<br>9. யாக்கோபு<br>10. ஆதி கிறிஸ்தவர்கள்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. சிருஷ்டித்தல்<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு – சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. ஜெபம்<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. சிருஷ்டித்தல் & வீழ்ச்சி<br>2. ஆரம்பகால முன்னேற்றங்கள் – ஆதியாகமம்<br>3. பேதுரு<br>4. பேதுரு – சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. கிறிஸ்தவ வாழ்க்கை<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| தொடர் B | 1. கிறிஸ்துவின் ஆரம்ப வாழ்க்கை<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. உவமைகள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. இயேசு சந்தித்த மக்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆதி கிறிஸ்தவர்கள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. சுவிசேஷம் எழுதிய ஆசிரியர்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆதி கிறிஸ்தவர்கள்<br>6. யாக்கோபும் அவருடைய குடும்பமும்<br>7. யோசேப்பு<br>8. அப்போஸ்தலர். 2:42 – முன்னே இருக்கும் வழி<br>9. மோசே<br>10. மோசே<br>11. நியாயப்பிரமாணம்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| தொடர் C | 1. தானியேல்<br>2. அதிக அற்புதங்கள்<br>3. இயேசு சந்தித்த மக்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத் & சாமுவேல்<br>6. தாவீது<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. யோனா<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சந்தித்த மக்கள்<br>3. அதிக அற்புதங்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. தேவன் பயன்படுத்திய மனிதர்கள் – ப.ஏ.<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சொன்னவை<br>3. கர்த்தருடைய வல்லமை<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. அதிக ப.ஏ. கதாபாத்திரங்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை |

# A1 – கதை 1

தேவன் உலகத்தைப் படைத்தார் - இந்த கதை, தேவன் வானத்தையும் பூமியையும் படைத்ததைப் பற்றியது.

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. தேவன் உலகத்தைப் படைத்தார்<br>2. தேவன் படைத்த எல்லாவற்றிற்காகவும் நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** ஆதியாகமம் 1:1<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 1:1-19 |
| **அறிமுகப்படுத்துக:** | 1. ஒரு வீட்டின் படத்தை காட்டுக அல்லது பிள்ளைகளை வரைய செய்க<br>2. வீட்டை குறித்து சில கேள்விகளைக் கேளுங்கள் - இந்த வீட்டை கட்ட எவ்வளவு நாட்கள் ஆகும்? இந்த வீட்டைக் கட்ட என்னென்ன தேவைப்படும்?<br>ஒரு வீட்டை கட்ட அநேக பொருட்கள் தேவைப்படும், ஆனால் தேவனோ ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் உருவாக்கினார். |
| **கற்றுத்தருக:** | ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார். தேவன் உலகத்தை படைக்கும் முன் வெறும் இருளிலே இருந்தது. (ஆதியாகமம் 1:1-3) பூமி எப்பொழுதும் இருளாயிருந்தால் எப்படியிருக்கும்? (ஒரு மாணவனின் கண்களை கட்டிக் கேளுங்கள்) முதல் நாளில் தேவன் “வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார்” வெளிச்சம் உண்டாயிற்று. தேவன் வெளிச்சத்திற்கு பகல் என்றும் இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார். எப்போதும் இருளில்லாமல், பகலுக்குப் பிறகு இருள் மாறி மாறி வந்தது. (ஆதியாகமம் 1:4-5) இரண்டாம் நாளில் தேவன் ஆகாயத்தையும், காற்றையும் படைத்தார். இரவு வந்தது இரண்டாம் நாள் முடிந்தது. (ஆதியாகமம் 1:6-8) பிள்ளைகள் நன்கு மூச்சு விட சொல்ல வேண்டும். நமக்கு காற்று எவ்வளவு முக்கியம் என்பதை யோசிக்க வேண்டும்.<br>இந்நாள் வரை பூமியை தண்ணீர் மூடியிருந்தது. எனவே இது நிலத்தை படைக்கும் நேரம். எனவே தேவன் பேசி நிலம் உண்டாகச் செய்தார். நிலத்தைச் சுற்றி தண்ணீர், அது கடலாயிற்று. பின்னும் தேவன் “பூமியானது எல்லாவித மரங்களாலும் செடிகளாலும் நிறையக்கடவது” தேவன் தாம் படைத்த எல்லாவற்றையும் பார்த்தார் அது மிகவும் நன்றாயிருந்தது. இது மூன்றாம் நாள் (ஆதியாகமம் 1:9-13) சில செடிகளின் பெயர்களைக் கூறச் சொல்ல வேண்டும். வண்ணங்களைப் பற்றியும் ஆலோசிக்க வேண்டும். செடிகளின் அளவு மற்றும் அழகைக் குறித்தும் சிந்திக்கவும்.<br>நான்காம் நாளில் தேவன் ஆகாயத்தில் சுடர்களை உண்டாக்கினார். பகலுக்காக சூரியனையும், இரவுக்காக சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தார். தேவன் தாம் உண்டாக்கின சுடர்களைப் பார்த்தார் அவை மிகவும் நன்றாயிருந்தது. (ஆதியா-கமம் 1:14-19) சூரியனின் நன்மையைக் குறித்து பேசுங்கள், நட்சத்திரங்களின் அழகைக் குறித்து வர்ணியுங்கள்.<br>தேவன் நமக்கு ஒரு அழகான உலகைப் படைத்திருக்கிறார் மற்றும் நமக்குத் தேவையானவை எல்லாவற்றையும் படைத்திருக்கிறார். எனவே அவருக்கு நாம் நன்றி கூற வேண்டும்.<br>பைபிள் டைம் பாடங்களைச் செய்து முடிக்கவும்<br>காட்டுங்கள்: FBI தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார். |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தைக் கற்றுக்கொடுங்கள் ஆதியாகமம் 1:1 |
| **ஞாபகப்படுத்துக:** | ஞாபகம் வைக்க:<br>1. துவக்கத்திலே உலகம் எப்படியிருந்தது?<br>2. எந்த நாளில் வெளிச்சம் உண்டாயிற்று?<br>3. இரண்டாம் நாளில் தேவன் எவைகளை படைத்தார்?<br>4. துவக்கத்திலே பூமியை எது மூடியிருந்தது?<br>5. மூன்றாம் நாளில் வளர்கிற எந்த இரண்டை தேவன் படைத்தார்?<br>6. பகலுக்கு தேவன் உண்டாக்கிய சுடர் எது?<br>7. இரவுக்கு தேவன் உண்டாக்கிய சுடர்கள் எவை?<br>இந்த வசனத்தை முடிக்கவும்: ஆதியிலே தேவன் |

## A1 – கதை 2

தேவன் மிருகங்களையும் மனிதனையும் படைத்தார் - இந்த கதை முதல் மனிதனைப் பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. தேவன் மனிதனை தமது சாயலாகப் படைத்தார், மனிதர்கள் அவருக்கு மிகவும் விசேசமானவர்கள்.<br>2. நம்மை தேவன் படைத்தப்படியினால், நாம் அவரது வழிகளைப் பின்பற்ற வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** ஆதியாகமம் 1:31<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 1:20 -2:3 |
| **அறிமுகப்படுத்துக:** | நீங்கள் உருவாக்கி நன்றாக வெளிவராமல் போன எதையாவது கொண்டு வாருங்கள் எ.கா ஒரு கேக் துண்டு. திட்டமிட்ட படியே வெளிவராமல் போகும் போது ஏற்படும் மன உளைச்சலைப் பற்றி பேசுங்கள்.<br>தேவன் உண்டாக்கிய ஏராளமான படைப்புகள் எதன் மூலம் தேவன் வருத்தப்படவில்லை என்பதை பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள்<br>பிள்ளைகளை மற்ற மிருகங்கள் போல நடிக்கச் செய்யுங்கள்<br>(மற்ற பிள்ளைகளை யூகிக்கச் செய்யுங்கள்.) |
| **கற்றுத்தருக:** | ஐந்தாம் நாளில், தேவன் ஆயிரக்கணக்கான வித விதமான பறவைகளையும், மீன்களையும் படைத்தார். தேவன் அவை நல்லது என கண்டார். (ஆதியாகமம் 1:20-23) பிள்ளைகளுக்கு தெரிந்த சில மீன்களைப் பற்றியும், பறவைகளைப் பற்றியும் பேசவும்.<br>ஆறாம் நாளில் தேவன் எல்லா மிருகங்களையும் படைத்தார். அவர் ஒட்டக சிவிங்கிகளை நீண்ட கழுத்துள்ளதாகவும், மற்றும் சிங்கம் புலிகளை கூர்மையான பற்களோடும் படைத்தார் – தேவன் அவை எல்லாவற்றையும் படைத்தார். (ஆதியா-கமம் 1:24-25) தேவன் எல்லா அருமையான காரியங்களை படைத்தாலும், இன்னும் விசேசமான ஒரு படைப்பைப் படைக்க வேண்டியதாக இருந்தது. பிள்ளைகளுக்கு மண்ணைக் காட்டி, மண்ணைக் கொண்டு எதை உருவாக்க முடியும் என்று கேளுங்கள். தேவன் பூமியின் மண்ணை எடுத்து முதல் மனிதனை உருவாக்கினார். தேவன் மனிதனின் மூக்கிலே ஜீவ சுவாசத்தை ஊதினார், மனிதன் உயிர் பெற்றான். முதல் மனிதனின் பெயர் ஆதாம் (ஆதியாகமம் 1:26-31) தேவன் ஆதாமை படைக்கும் போது தமது சாயலாக மனிதனைப் படைத்தார். தேவன் தம்மை போல மனிதனை உண்டாக்கினார். நாம் தேவ சாயலாக படைத்தபடியால், நாம் மிருகங்களை போன்றவர்கள் அல்ல, நாம் காரியங்களை உருவாக்குகிறவர்கள், மற்றும் சிந்திக்கும் திறன் படைத்தவர்கள். சரி எது, தவறு எது என்று தேவன் மூலமாய் அறிந்து தேவனை பின்பற்றக்கூடியவர்கள்.<br>தேவன் உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் ஆறு நாட்களில் உண்டாக்கினார். அவை எல்லாவற்றையும் உண்டாக்கின பின்பு தேவன் எல்லாவற்றையும் பார்த்தார், அவை எல்லாம் மிகவும் நன்றாயிருந்தது. ஏழாம் நாளில் தேவன் ஓய்ந்திருந்தார். (ஆதியாகமம் 2:1-3) நாம் வேலைகளை செய்து முடித்த பின் ஓய்வு எடுப்பதின் அவசியத்தைக் குறித்து ஆலோசிக்கவும்.<br>தேவன் உண்டாக்கின உலகம் மிகவும் நேர்த்தியாக உருவாக்கப்பட்டது, மற்றும் அவர் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து மிகவும் திருப்தியடைந்தார்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுங்கள்: www.teachingideas.co.uk.<br>FBI – God creates the heavens and the earth<br>என்ற இணையதளத்தைப் பாருங்கள். |
| **கற்றுக்கொள்ளுக:** | இந்த முக்கிய வசனத்தை விளக்கி கற்றுக்கொடுக்கவும். ஆதியாகமம் 1:31 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. தேவன் பறவைகளையும், மீன்களையும் எந்த நாளில் படைத்தார்.˙. அவைகளைப் பற்றி தேவன் கூறியது என்ன?<br>2. ஆறாம் நாளில், தேவன் மிருகங்களையும், மற்றும் வேறு எவையும் தேவன் படைத்தார்?<br>3. தேவன் எல்லாவற்றையும் படைத்த பின்பு சொன்னது என்ன?<br>4. முதல் மனிதன் யார்?<br>5. அவனை உருவாக்க தேவன் பயன்படுத்தியது எது?<br>6. தேவன் உலகத்தை உண்டாக்க எத்தனை நாட்கள் எடுத்துக்கொண்டார்?<br>7. ஏழாம் நாளில் தேவன் செய்தது என்ன? |

## A1 – கதை 3

முதல் மனிதன் மற்றும் மனு'ஷி - இந்த கதை ஆதாமின் மனைவியைப் பற்றியது.

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. தேவனுடைய படைப்பைப் பாதுகாப்பதில் மனிதனுக்கு உதவி செய்ய தேவன் ஆதாமுக்கு ஒரு மனைவியைப் படைத்தார்.<br>2. தேவன் எல்லாவற்றின் மேலும் ஆளுகைச் செய்கிறார்.<br>**முக்கிய வசனம்:** ஆதியாகமம் 2:18 அல்லது சங்கீதம் 24:1<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 2:4-25 |
| **அறிமுகப்படுத்துக:** | பிள்ளைகளுக்குத் தோட்டங்களைப் பற்றிய அனுபவம் இருந்தால், அவர்கள் தோட்டத்தில் வளர்வதாக காண்கிறவைகளைக் குறித்து அவர்களிடம் பேசுங்கள், பூக்களோ, பழங்களோ எதுவாகவும் இருக்கலாம். ஒருவேளை தோட்டம் என்றால் என்னவென்று தெரியாத பிள்ளைகள் இருப்பார்களேயாகில் அவர்களுக்கு தோட்டம் என்றால் என்ன என்று விளக்க முயற்சி செய்யுங்கள்.<br>ஏதேன் தோட்டம் என்பது நாம் கற்பனை செய்வதற்கும் மேலான மிகவும் அழகான ஒரு தோட்டம் என்று பிள்ளைகளுக்கு விவரித்துச் சொல்லவும்.<br>ஏதேன் தோட்டத்தைப் பற்றி ஆலோசிக்கவும்: ஏதேன் தோட்டத்தில் வாழும் வாழ்க்கை எப்படியிருக்கும்? எவை எல்லாம் அந்த தோட்டத்தில் வாழ்ந்திருக்கும்? நீ அந்த தோட்டத்தில் எதை அதிகமாய் விரும்பியிருப்பாய்? ஆதாம் உண்மையில் தனிமை யாய் இருந்திருப்பானா? |
| **கற்றுத்தருக:** | ஏதேன் என்னும் மிக அழகான தோட்டத்திலே தான் ஆதாம் வாழ்ந்தான். உணவு, தண்ணீர் மற்றும் ஆதாமுக்கு தேவையானவையெல்லாம் தேவன் ஆதாமுக்கு கொடுத்தார். அந்த தோட்டத்தை பாதுகாக்கும் படியாக தேவன் ஆதாமுக்குச் சொன்னார் (ஆதியாகமம் 2:15)<br>தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் ஆதாமுக்கு காண்பித்து அவை எல்லாவற்றிற்கும் ஆதாம் மூலம் பெயர் இடுவித்தார். (ஆதியாகமம் 2:19-20)<br>தேவனுக்கு ஆதாம் தனிமையாயிருப்பதில் விருப்பமில்லை. ஆதாமைச் சுற்றிலும் அழகிய மிருகங்கள், பறவைகள், மரம் செடி கொடிகள் எல்லாம் இருந்த போதும், அந்த தோட்டத்தில் அவனோடு வாழ்க்கையை பகிர்ந்து கொள்ள ஒரு துணை அவனுக்கு வேண்டும் என தேவன் நினைத்தார். ஆதாமுக்கு தேவன் ஆழ்ந்த தூக் கத்தைக் கொடுத்தார். அவன் நன்கு தூங்கின பின்பு தேவன் அவனது விலா எலும்பில் ஒன்றை எடுத்து அந்த விலா எலும்பை ஒரு பெண்ணாக படைத்தார். இனி ஆதாம் தனிமையானவன் அல்ல. இனி அவனுக்கு ஏவாள் என்னும் பெயர் கொண்ட ஒரு மனைவி இருக்கிறாள். அவள் அவனுக்கு ஏற்ற துணையானாள். ஆதாமோடு சேர்ந்து வாழ்க்கையை அனுபவித்தாள். (ஆதியாகமம் 2:20-24)<br>தோட்டத்தில் அநேக மரங்கள் இருந்தன. ஆனால் தோட்டத்தின் நடுவே "நன்மை தீமை அறிய ஏதுவான ஒரு மரம்" இருந்தது. அந்த மரத்தின் பழத்தை தவிர தோட்டத்தில் இருக்கும் எல்லா மரத்தின் பழங்களையும் ஆதாமும் ஏவாளும் சாப்பிடலாம் என தேவன் அவர்களுக்கு கட்டளைக் கொடுத்தார். (ஆதியாகமம் 2:16-17) வீட்டிலும், பள்ளியிலும் தங்களுக்கு இருக்கும் விதிகளைப் பற்றிக் கூறவும். நமக்கு ஏன் வி-திகள் தேவை.'. (நம்மை பாதுகாக்கவும் மகிழ்ச்சி தரவும்) ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் கொடுத்த விதியைப் பிள்ளைகள் புரிந்து கொண்டனரா என பரிசோதிக்கவும். தேவன் உலகத்தை உண்டாக்கி அதை ஆளுகைச் செய்கிறார் என்பதை விளக்கவும். எனவே ஜனங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என உத்தரவிடுவதற்கு அவரால் மட்டுமே முடியும். நாம் அவருக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும். |
| **கற்றுக்கொள்ளுக:** | காட்டுங்கள்:<br>முக்கிய வசனத்தை விளக்கத்தோடு கற்றுக்கொடுங்கள் ஆதியாகமம் 2:18 அல்லது சங்கீதம் 24:1 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. ஆதாம் எங்கே வாழ்ந்து வந்தான்?<br>2. ஆதாம் தோட்டத்திலே என்ன செய்ய வேண்டும்?<br>3. மிருகங்களுக்கு பெயர்கள் எப்படி வந்தது?<br>4. வாக்கியத்தை முடித்து வைக்கவும்: தேவன் ஆதாமுக்கு ............................ படைக்க நினைத்தார்<br>5. ஆதாமின் மனைவியை படைக்க தேவன் எதை உபயோகித்தார்?<br>6. ஆதாமின் மனைவியின் பெயர் என்ன?<br>7. தோட்டத்தின் நடுவிலிருந்த விசே' மரத்தின் பெயர் என்ன?<br>8. அந்த மரத்தை பற்றி தேவன் விதித்த விதி என்ன? |

## A 1 – கதை 4

### தேவனுடைய உலகம் கொடுக்கப்பட்டது – பாவம் உலகத்தில் நுழைந்த கதை

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பூரணமானப் படைப்பை கறைப்படுத்தினார்கள். நாமும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகிறோம், எனவே நமது பாவங்களுக்காக வருந்தி தேவமன்னிப்பை நாட வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** ரோமர் 5:12 அல்லது ரோமர் 5:1<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 3:1-24 |
| **அறிமுகப்படுத்துக:** | ஒரு அழகான ஓவியத்தைக் கொண்டு வந்து அதை கிறுக்கி அல்லது எப்படியோ அழித்து விடுங்கள் நீங்கள் செய்ததைக் குறித்து ஆலோசியுங்கள் - அந்த அழகான ஓவியத்திற்கு என்ன ஆயிற்று?<br>தேவன் ஒரு அழகான உலகத்தை உண்டாக்கினார், ஆனால் அந்த உலகம் கெடுக்கப்பட்டது என்பதை விளக்கவும். |
| **கற்றுத்தருக:** | உலகம் படைக்கப்பட்ட போது எல்லாம் நன்றாயிருந்தது, ஆனால் கடவுளின் எதிரியான பிசாசு பாம்பைப் போல உரு மாறி தோட்டத்திற்குள் வந்தான். அந்த பாம்பு ஏவாளினிடத்தில் வந்து நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை புசித்தால், தேவனை போல ஞானமுள்ளவளாவாள் என சொன்னது. (ஆதியாகமம் 3:1-5)<br>ஏவாள் தேவனுடைய எதிரிக்கு செவி சாய்த்தாள். அதன் பின்பு தேவனுக்கு கீழ்ப்படியாமல் போய் அந்த மரத்தின் பழத்தை சாப்பிட்டாள். பின்பு ஆதாமுக்கு அதைக் கொடுத்தாள். அவனும் சாப்பிட்டான்.<br>அந்த சாயங்காலத்திலே தேவன் ஆதாமோடும் ஏவாளோடும் பேச விரும்பினார். ஆனால் அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை என்பதை நன்கு அறிந்த படியால், அவர்கள் போய் தங்களை ஒளித்துக்கொண்டார்கள். (ஆதியாகமம் 3:7-8)<br>நீங்கள் யாருக்காவது கீழ்ப்படியாமலிருந்திருக்கிறீர்களா? அதன் விளைவாக ஏதாவது நடந்திருக்கிறதா? ஆதாமும் ஏவாளும் தேவனிடத்திலிருந்து மறைந்து கொள்ள முடியவில்லை நாமும் தான்.<br>தேவன் கூப்பிட்டார் “நீ எங்கே இருக்கிறாய்?” அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை என்று அறிந்த தேவன், அவர்களை பின்னும் நேசித்தார். அவர்களது கீழ்ப்படியாமைக்கு அவர்கள் தண்டனை பெற வேண்டும். எனவே தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியே அனுப்பினார். அவர்களது பாவம் தேவனுடைய படைப்பை நாசமாக்கியதோடல்லாமல், தேவனோடு அவர்களுக்கு இருந்த நட்பையும் சீர்குலைத்தது. அவர்களுடைய பாவத்தினால் பூமியானது முள்ளும் குருக்கும் முளைப்பித்தது. மிருகங்களும் மனிதர்களும் எதிரியானார்கள் எல்லாவற்றிற்கும் மேலே, மரணம் உலகில் பிரவேசித்தது. (ஆதியாகமம் 3:9-24)<br>நாம் தவறான காரியங்களை செய்யும் போது தேவன் மிகவும் க்‘டப்படுகிறார். தேவனுக்கு பிரியமில்லாத சில காரியங்களைப் பற்றி சிந்தியுங்கள். ஆனாலும் அவர் நம் மேல் அன்புள்ளவராயிருக்கிறார். தேவக்குமாரனாகிய இயேசு நமக்காக சிலுவையில் மரித்ததால் நாம் பாவமன்னிப்பைப் பெற்று தேவனுக்கு சிநேகிதர்களாக முடியும் நாம் அவரை விசுவாசிக்கும் போது.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும். |
| **கற்றுக்கொள்ளுக:** | காட்டுக :<br>முக்கிய வசனத்தை கற்றுத்தருக: ரோமர் 5:12 அல்லது ரோமர் 5:1 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. பழத்தை எடுக்கும்படி ஏவாளை வஞ்சித்தவன் யார்?<br>2. அந்த பழத்தை ஏவாள் சாப்பிடும்படி சாத்தான் செய்தது என்ன?<br>3. ஏவாள் அந்த பழத்தை யாருக்கு கொடுத்தாள்?<br>4. தேவன் தங்களை அழைத்த போது ஆதாமும் ஏவாளும் என்ன செய்தார்கள்?<br>5. ஆதாமும் ஏவாளும் செய்ததைக் குறித்து தேவன் என்ன உணர்ந்தார்?<br>6. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் என்ன ஆயிற்று?<br>7. நாம் தவறு செய்யும் போது தேவனுக்கு எப்படி இருக்கிறது?<br>8. நாம் செய்த தவறுகளுக்கு நாம் எப்படி மன்னிப்பைப் பெற முடியும்? |

## A2 – கதை 1

நோவா தேவனுக்கு கீழ்ப்படிகிறான் - இந்த கதை நோவா பேழை கட்டுவதைப்பற்றியது.

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. நோவாவும் அவன் குடும்பத்தினரும் மற்றும் மிருகங்களும் பேழையில் பத்திரமாய் காக்கப்பட்டார்கள்.<br>2. தேவன் நாம் காப்பாற்றப்படும்படியும் ஒரு வழியை உண்டு பண்ணியிருக்கிறார், எனவே நோவா விசுவாசித்தது போல நாமும் விசுவாசிக்க வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** அப்போஸ்தலர் 16:31<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 6:5-22 |
| **அறிமுகப்படுத்துக:** | பிள்ளைகளின் விருப்ப விலங்குகளைப் பற்றி கேட்கவும்<br>இந்த எல்லா விலங்குகளும் ஒரே இடத்தில் இருந்தால் எப்படியிருக்கும் என கற்பனை செய்ய சொல்லவும் பின்னர், எப்படிப்பட்ட இடம் இதற்கு ஏற்ற இடமாக இருக்கும் என சிந்திக்கவும், அந்த இடத்தின் நாற்றம் எப்படியிருக்கும்?<br>ஒரு காலத்தில் ஒரு பெரிய கப்பலில் சில மனிதர்களும் அநேக மிருகங்களும் இருந்ததைப் பற்றி பார்க்கப் போகிறோம் என சொல்லவும். |
| **கற்றுத்தருக:** | தேவன் முதன்முதலில் உலகத்தை படைத்தபோது எல்லாம் நன்றாகவும் அழகாகவும் இருந்தது. ஆனால் ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாமல் போனார்கள். அவர்களது சந்ததி மிகவும் கெட்டுப்போன போது, தேவன் மனிதர்களை படைத்ததற்காக விசனப்பட்டார். (ஆதியாகமம் 6:5-6)<br>முழு உலகமும் துன்மார்க்கமாயிருந்த போது ஒரே ஒரு மனிதன் மட்டும் தேவனுக்கு பிரியமானவனாயிருந்தான். அவனது பெயர் நோவா. இந்த மனிதனும் அவனது மனைவியும் அவனது 3 குமாரரும், மற்றும் அவர்களது மனைவிகளும் தேவனுக்கு விருப்பமானதை செய்ய முயற்சி செய்து வாழ்ந்து வந்தார்கள். ஆனால் மற்ற மக்களோ தேவனை மறந்தவர்களாக வாழ்ந்து வந்தனர். (ஆதியாகமம் 6:8-10)<br>உலகம் மிகவும் மோசமானதாய் மாறியதால், தேவன் உலகத்தை தண்டிக்க நினைத்தார். தேவன் நோவாவை ஒரு மிகப்பெரிய கப்பலைச் செய்யச் சொன்னார் அதற்கு பேழை என்று பெயர். ஒரு கால் பந்து மைதானம் அளவுக்கு அகலமாகவும், ஒரு மூன்று மாடி கடடிடமளவுக்கு உயரமானதாகவும் இருந்தது. அந்த பேழை மிகவும் கடின உழைப்பிற்கு பிறகு கட்டி முடிக்கப்பட்டது. (ஆதியாகமம் 6:22)<br>தேவன் நோவாவைப் பார்த்து எல்லா வகையான விலங்குகளையும் பேழைக்குள்ளே அழைத்து வரச் சொன்னார். பாடத்தின் துவக்கத்திலே பிள்ளைகள் கூறின சில மிருகங்களின் பெயர்களை கூறவும். இந்த எல்லா மிருகங்களையும், நோவாவின் குடும்பத்தோடும்கூட பத்திரமாய் காக்கப்பட வேண்டும் என்பதே கடவுளின் நோக்கம். நோவாவின் குடும்பத்தில் உள்ள 8 பேரையும் என்னவும். தேவன் கதவை அடைத்தார். அவர்களை காக்கும் படியான தேவனுடைய திட்டம் நிறைவேறினது. (ஆதியாகமம் 7:13-16)<br>நாமும் நிறையத் தவறுகளைச் செய்திருக்கிறோம். நாமும் நமது பாவத்தின் தண்டனையிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். தேவக்குமாரனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலே நாம் விசுவாசம் வைக்கும் போது நாம் காப்பாற்றப்படும் படியான ஒரே ஒரு வழியை தேவன் நமக்காக ஏற்படுத்தியிருக்கிறார். இந்த இயேசுகிறிஸ்து நமக்கு ஒரு பேழையை போன்றவர்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக: FBI- ழேய இந்த படங்களை பிள்ளைகளுக்கு காட்டவும். |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை விளக்கத்துடன் கற்றுக்கொடுக்கவும். அப்போஸ்தலர் 16:31 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. உலகத்திலிருந்த பிரச்சனை என்ன?<br>2. தேவன் செய்ய தீர்மானித்தது என்ன?<br>3. யார் தேவனை பிரியப்படுத்தினான்?<br>4. தேவன் நோவாவை என்ன செய்யும்படி கூறினார்?<br>5. யார் பேழையினுள் பிரவேசித்தனர்?<br>6. பேழையின் கதவை அடைத்தது யார்?<br>7. ஏன் பேழையினுள் ஜனங்கள் பாதுகாக்கப்பட்டிருந்தார்கள்?<br>8. நம்முடைய பாவத்தின் தண்டனையிலிருந்து நாம் எப்படி பாதுகாக்கப்பட முடியும்? |

# A 2 – கதை 2

பேழையில் பாதுகாப்புடன்- வெள்ளப்பிரளையம் ஆரம்பித்த கதை

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>தேவனை முழுமையாக நம்பினதால், நோவாவும் அவன் குடும்பமும் காப்பாற்றப்பட்டார்கள். நாமும் தேவனை விசுவாசித்தால், தேவன் நம்மையும் பாதுகாப்பார் என வாக்களித்துள்ளார்.<br>**முக்கிய வசனம்:** நீதிமொழிகள் 29:25<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 7:1-16 |
| **அறிமுகப்படுத்துக:** | பிள்ளைகள் தாங்கள் கட்டிய அல்லது உருவாக்கிய எதையாவது பற்றிய விளக்கத்தைக் கேட்டறியுங்கள். இதைச் செய்வதற்கு எதை பயன்படுத்தினாய்? இதை செய்வது கடினமாக இருந்ததா? யாராவது உனக்கு உதவி செய்தார்களா? போன கதையை மறுபடியும் நினைவுப்படுத்துங்கள். நோவா பேழையை கட்டுவதற்கு எதை பயன்படுத்தினான்? அதை கட்டுவது கடினம் என்று நீ நினைக்கிறாயா? ஏன் அதை கட்டினான்? அது மிக கடினமான வேலையாயிருந்தாலும் தேவன் சொன்னதினால் நோவா அதை செய்தான். அவன் தேவனின் ஆலோசனையை முற்றிலும் கேட்டான். |
| **கற்றுத்தருக:** | நோவாவும் அவன் குடும்பம் பேழையில். (ஆதியாகமம் 7:6-7)<br>ஏழு நாளைக்கு பிறகு மழை பெய்ய ஆரம்பித்தது. பெய்து கொண்டேயிருந்தது. எல்லா செடிகளும் மூழ்கிப்போயின. ஆறுகளும், கடல்களும், பெருவெள்ளமாயின (ஆதியாகமம் 7:17-20) இவ்வளவு நாட்கள் நோவாவை கிண்டல் செய்த யாராலும் பேழைக்குள்ளே பிரவேசிக்க முடியவில்லை, மிக தாமதமாயிற்று .......................... இந்த விசயத்தை விளக்கவும்.<br>வெள்ளம் இன்னும் மேலே எழும்பிக்கொண்டிருந்தது. வீடுகள், மரங்கள், மற்றும் உயரமான மலைகள் எல்லாம் தண்ணீரில் மூடப்பட்டது. (ஆதியாகமம் 7:23)<br>நாமும் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரை நம்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை பிள்ளைகளுக்கு விளக்க வேண்டும். நோவா செய்தது போல நாமும் செய்ய வேண்டும் என தேவன் விரும்புகிறார். அப்பொழுது நம்மையும் அவர் பாதுகாப்பார் என அவர் வாக்களித்துள்ளார்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக: FBI- Noah and the ark., www.bibleforchildren.org |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை விளக்கத்தோடு கற்றுக்கொடுக்கவும். நீதிமொழிகள் 29:25 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. தேவனை நோவா விசுவாசிக்கிறார் என்பதை எவ்வாறு காட்டினான்?<br>2. நோவாவோடு பேழைக்குள் போனது யார்?<br>3. மழை பெய்வதற்கு எத்தனை நாளைக்கு முன்பே அவர்கள் பேழைக்குள் இருந்தார்கள்?<br>4. வெள்ளம் எவ்வளவு உயரத்திற்கு எழும்பினது?<br>5. யார் பாதுகாக்கப்பட்டார்கள்?<br>6. ஏன் நோவா பாதுகாக்கப்பட்டான்?<br>7. நாம் நம்பும் போது நம்மை பாதுகாக்கிறவர் யார்? |

# A 2 – கதை 3

ஒரு புது ஆரம்பம் - இந்த கதை வெள்ளப்பிரளையம் முடிந்ததைப் பற்றியது.

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. தேவன் நோவாவுக்கும் அவன் குடும்பத்திற்கும் ஒரு புது மற்றும் சுத்தமான பூமியை வாழும்படி கொடுத்தார்.<br>2. நாம் தேவனை நோக்கி நம்மை மன்னிக்கும்படி வேண்டினால், அவர் நமது வாழ்க்கையை புதுப்பித்து நம்மை சுத்தமாக்குவார்.<br>**முக்கிய வசனம்:** 2கொரிந்தியர் 5:17<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 8:1-19 |
| **அறிமுகப்படுத்துக:** | நோவாவும் அவன் குடும்பத்தினரும் பேழைக்குள் மிக நீண்ட நாட்கள் வாழ வேண்டியிருந்தது என்பதை பிள்ளைகளுக்கு விளக்க வேண்டும்.<br>இப்படிப்பட்ட ஒரு பேழையிலே நீண்ட நாட்கள் வாழ வேண்டுமென்றால், நாள் முழுக்க என்ன செய்வீர்கள்? எப்படி உணர்வீர்கள்? என்று பிள்ளைகளிடம் கேட்க வேண்டும். |
| **கற்றுத்தருக:** | 40 நாட்களுக்கு பிறகு மழை ஓய்ந்தது. ஆனால் வெள்ளம் இன்னும் மலைகளை மூடியபடிதான் இருந்தது. (ஆதியாகமம் 8:1-4)<br>ஒரு நாள் நோவா ஒரு காகத்தை தண்ணீர் குறைந்து விட்டதா என பார்க்கும்படி வெளியே அனுப்பினான், ஆனால் அது திரும்ப வரவில்லை. பிறகு ஒரு புறாவை அனுப்பினான் அது திரும்பி வந்தது. ஒரு வாரம் கழித்து மீண்டும் அந்த புறாவை அனுப்பினான், அது ஒரு ஒலிவ இலையைக் கொண்டு வந்த போது எல்லாரும் மகிழ்ந்தார்கள். எனவே இப்பொழுது தண்ணீரின் அளவுஇ மரங்களின் உயரத்திற்கு கீழே வந்து விட்டது என பிள்ளைகளுக்கு விளக்கவும். (ஆதியாகமம் 8:6-11)<br>7 நாட்களுக்கு பின்னர் மீண்டும் நோவா புறாவை அனுப்பினான். ஆனால் இந்த முறை அது திரும்ப வரவில்லை. எனவே தண்ணீரின் அளவு இன்னும் குறைந்து விட்டது என்று நோவா அறிந்து அந்த புறா தனக்கென ஒரு தங்குமிடத்தை கண்டுபிடித்தது என்று நோவா அறிந்து கொண்டான். கடைசியிலே அந்த பேழை அரராத் மலைகளின் ஒன்றின் மேல் தங்கியது. (ஆதியாகமம் 8:12)<br>பூமி காய்ந்த போது தேவன் நோவாவையும் அவன் குடும்பத்தாரையும், மிருகங்களோடுங்கூட பேழையை விட்டு வெளியே வரும்படி சொன்னார். இது எல்லாருக்கும் மிக நல்ல செய்தியாயிருந்தது! இவ்வளவு நாட்கள் அவர்களெல்லாரும் அந்த பேழைக்குள் அடைப்பட்டிருந்தார்கள். இவர்களெல்லாரும் பேழையை விட்டு வெளியே வரும்படி சொல்லப்பட்டபோது அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள்? இந்த புதிய உலகம் எப்படியிருந்திருக்கும்? பிள்ளைகளை சிந்திக்கச் செய்யுங்கள் (ஆதியாகமம் 8:15-19)<br>நோவாவின் நாட்களில் இருந்தவர்களுக்கும் நமக்கும் அவ்வளவு பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை என்பதை பிள்ளைகளுக்கு புரிய வைக்கவும். நம்முடைய உள்ளத்திலிருந்து தீய காரியங்களை எடுத்துப்போட்டு தேவன் அதற்கு பதிலாய் புது இருதயத்தை நமக்கு தர முடியும். நாம் தேவனிடத்தில் மன்னிப்பை கேட்க வேண்டும், மற்றும் நமது பாவங்களுக்காக மரித்த இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக: FBI- Noah and the ark., www.bibleforchildren.org |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை விளக்கத்தோடு கற்றுக்கொடுக்கவும் 2கொரிந்தியர் 5:17 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. நோவா பேழையை விட்டு முதன் முதலில் வெளியே அனுப்பிய பறவை எது?<br>2. இரண்டாம் முறை வெளியே சென்ற புறா, கொண்டு வந்தது என்ன?<br>3. பேழை எங்கே தங்கியது?<br>4. நோவாவை பேழையை விட்டு வெளியே வரும்படி அழைத்தவர் யார்?<br>5. வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்டது யார்?<br>6. நமது பாவங்களுக்கு பதிலாக தண்டிக்கப்பட்டவர் யார்?<br>7. சுத்த இருதயத்தை பெற்றுக்கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன?<br>கோடிட்ட இடங்களை நிரப்புக. - ஒருவன் கிறிஸ்துவுக்குளிருந்தால் புது ....................................... |

## A 2 – கதை 4

தேவனுடைய வாக்குத்தத்தம் - இந்த கதை நன்றி சொல்லுவதைப் பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. தேவன் வாக்கை காப்பாற்றுபவர்.<br>2. தேவன் எப்படி நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்றினாரோ, அதே போல அவரை நம்பி அவரை பின்பற்றுபவர்களை அவர் கைவிட மாட்டார் என வாக்களித்துள்ளார்.<br>**முக்கிய வசனம்:** எண்ணாகமம் 10:29 அல்லது எபிரேயர் 13:5<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 8:20-22 மற்றும் 9:7-17 |
| **அறிமுகப்படுத்துக:** | யாராவது உங்களுக்கு வாக்குக் கொடுத்ததைப் பற்றி பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள் பிள்ளைகளும் அதே போல ஒருவருக்கொருவர் தங்கள் வாழ்க்கையிலிருந்து சொல்ல நேரம் கொடுங்கள் யாராவது செய்த சத்தியத்தை மீறியிருக்கிறார்களா என பிள்ளைகளைக் கேளுங்கள் வேதாகமம் முழுவதும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அடங்கியிருக்கிறது என்றும், அவைகளை தேவன் உடைக்க மாட்டார் எனவும் பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள்.நாமும் அவரை நம்பி பின்பற்றுவோமானால் அவர் நம்மை கைவிடமாட்டார் என வாக்களித்துள்ளார் என பிள்ளைகளிடம் சொல்லுங்கள். |
| **கற்றுத்தருக:** | அநேக நாட்களாய் பேழைக்குள் இருந்தாலும், நோவாவும் அவன் குடும்பமும் பாதுகாப்பாயிருந்தார்கள். ஆனால் இப்பொழுது தேவன் நோவாவைப் பார்த்து அவர்களை பேழையிலிருந்து வெளியே போகும்படி சொன்னார். (ஆதியாகமம் 8:15-19)<br>முதல் காரியமாக நோவா செய்ய நினைத்தது “உமக்கு மிக நன்றி” என்று தேவனுக்கு சொல்வதுதான். அதை அவன் ஒரு பலிபீடம் கட்டி செய்தான். அந்த நாட்களில் பலி செலுத்தி தேவனுக்கு ஜனங்கள் நன்றி சொல்வது வழக்கம். (ஆதியாகமம் 8:20-21) நீங்கள் எந்தெந்த விசயங்களுக்காக நன்றி சொல்ல முடியும் என பிள்ளைகளை கேட்கவும். (ஒரு பேப்பரிலோ அல்லது போர்டிலோ, தேவனுக்கு நன்றி சொல்வதற்கான பட்டியலை தயாரியுங்கள்) நோவாவும் அவன் குடும்பமும் தேவனுக்கு நன்றி சொன்னதைக் குறித்து தேவன் மிகவும் பிரியப்பட்டார். அவர்களுக்கு ஒரு அருமையான வாக்குக்கொடுத்தார். “இனி நான் பூமி முழுவதும் வெள்ளத்தால் அழிக்க மாட்டேன்”. (ஆதியாகமம் 8:21-22)<br>1. 1. பின்பு தேவன் அவர்களுக்கு ஒரு அடையாளத்தை காண்பித்தார். அது ஒரு வானவில். ஒவ்வொரு முறையும் நோவாவின் குடும்பம் வானவில்லை பார்க்கும்போது தேவனுடைய வாக்குத்தத்தம் அவர்களுக்கு நினைவிலிருக்கும். (ஆதியாகமம் 9:12-13) வானவில்லைக் குறித்தும், அதன் வண்ணங்களைக் குறித்தும் ஆலோசிக்கவும். அடுத்த முறை பிள்ளைகள் வானவில்லைப் பார்க்கும் போது தேவனுடைய வாக்குத்தத்தத்தை நினைத்து அவருக்கு நன்றி சொல்லக் கற்றுக்கொடுங்கள்.<br>2. 2. தேவன் நோவாவுக்கு இட்ட ஆணையில் உண்மையாயிருந்தாரா? அவரை நாம் நம்பினால், அவர் தமது வாக்கில் நமக்கு எப்பொழுதும் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதை விளக்குங்கள் (2ம் முக்கிய வசனத்தைப் பாருங்கள்)<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>1. காட்டுக: FBI- Noah and the ark., www.bibleforchildren.org |
| **கற்றுக்கொள்ளுக:** | |
| **ஞாபகப்படுத்துக:** | 1. கடந்த பாடங்களிலிருந்து சில கேள்விகளைக் கேட்டு பிள்ளைகள் எவ்வளவு நினைவில் வைத்திருக்கிறார்கள் என்று சோதித்துப்பாருங்கள்.<br>2. நோவாவின் கதையிலிருந்து கற்றுக்கொடுத்த முக்கிய வசனங்களை நினைவுப்படுத்துங்கள் பிள்ளைகள் தாங்கள் கற்றுக்கொண்டதிலிருந்து எதையாவது படம் வரையவோ அல்லது எழுதவோ செய்யுங்கள். |

## A 3 – கதை 1

இயேசு பேதுருவை அழைத்தல் - இந்த கதை கர்த்தர் இயேசுவைப் பின்பற்றுவதைப் பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. இயேசுவுக்கு உடன் வேலையாயிருக்கவும், அவரது வேலையை பிற்காலத்தில் தொடர்ந்து செய்யவும் அவருக்கு ஆட்கள் தேவைப்பட்டது.<br>2. அவருக்கு நாம் உதவி செய்ய நாம் அவரை பின்பற்றி அவருக்கு கீழ்ப்படிய வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** மத்தேயு 4:19<br>**வேத பகுதி :** மத்தேயு 4:18-22 |
| **அறிமுகப்படுத்துக:** | நண்பர்களைப் பற்றி பேசுங்கள். அவர்கள் நண்பர்களை முதன் முதலில் எங்கே சந்தித்தார்கள்? ஏன் நமக்கு நண்பர்களிருப்பது நல்லது? எப்படிப்பட்ட நண்பர்கள் நமக்கு இருக்க வேண்டும்? (ஆலோசனைகளைக் கொடுக்கலாம்) கர்த்தர் இயேசுவுக்கு நல்ல நண்பர்கள் இருந்தார்கள். இன்றைக்கு அவர்களில் சிலரைப் பற்றி தான் பேச போகிறோம். காட்சிப்படுத்துக – கலிலேயா கடல் என்று சொல்லப்படும் ஒரு மிகப்பெரிய ஏரி ஒன்று இருந்தது அது எல்லாப்பக்கங்களிலும், மலைகளால் சூழப்பட்டிருந்தது. மீனவர்கள் அங்கு மீன்பிடிப்பது வழக்கம். அவர்கள் இந்த வேலையை எப்படி செய்திருப்பார்கள்? (வலை, படகு ................................ இன்னும் பல) மிக கடினமான வேலைதான். |
| **கற்றுத்தருக:** | இயேசு பேதுருவையும், அவனது சகோதரனாகிய அந்திரேயாவையும் அழைத்தார் (மத்தேயு 4:18-19) பேதுருவும் யோவானும் ஏற்கனவே இயேசுவை அறிந்திருந்தார்கள் மற்றும் அவர் எவ்வளவு முக்கியமானவர் என்பதையும் அறிந்திருந்தார்கள். அவர்கள் தங்கள் தொழிலை விட்டு இயேசுவோடு வந்து அவருடைய வேலையில் அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று இயேசு விரும்பினார். மற்றவர்கள் இயேசுவை அறிந்து கொள்ளும் வகையிலே அவர்களை இயேசுவிடம் கொண்டு வரும் ஊழியத்தை இயேசு என்ன வார்த்தைகள் பயன்படுத்தி சொன்னாரோ அதை பயன்படுத்துங்கள். அவர்களை எந்த விசே' வேலை செய்ய இயேசு அழைத்தார்!!<br>பேதுரு மற்றும் அந்திரேயாவின் மறுமொழி (மத்தேயு 4:20) இது சரியான காரியம்தான் என அவர்கள் எடுத்த உடனே அறிந்து கொண்டார்கள். அவர்கள் உடனே இயேசுவோடு செல்லுவதின் மூலம் அவர்கள் உடன்பாட்டை உறுதிப்படுத்தினார்கள். இந்த செயலை பிள்ளைகளின் வாழ்க்கையோடு ஒப்பிட்டு விளக்குங்கள். பேதுருவும் அந்திரேயாவும் அந்த தருணத்தை எப்படி உணர்ந்திருப்பார்கள் என கற்பனை செய்து பாருங்கள் (மிக சந்தோ'மாகவும், உணர்ச்சி பொங்கவும், மிக விசே'மாகவும் உணர்ந்திருப்பார்கள். ஏனென்றால் இயேசுவே தனிப்பட்ட முறையில் அவர்களை தெரிந்தெடுத்தார்). 2ம் நிலை பிள்ளைகளுக்கு அவர்கள் இயேசுவின் சீடர்கள் என்றும் அது அவர்கள் இயேசு எங்கெல்லாம் போகிறாரோ, அங்கெல்லாம் அவரோடு சென்று அவரிடத்தில் கற்றுக்கொள்ள முழுமையாக ஆயத்தமானவர்கள் என்று அர்த்தம் என்று கற்றுக்கொடுக்கவும். இயேசு யாக்கோபையும் யோவானையும் அழைத்தார். (மத்தேயு 4:21,22) அதே நாளில் பிற்பாடு இன்னும் 2 மீனவர்களையும் இயேசு அழைத்தார். அவர்களும் இயேசுவுக்கு பின் சென்றார்கள்.(2ம் நிலை)<br>நாம் ஒவ்வொருவரும் அவருடைய சீடர்களாக வேண்டும் என இயேசு விரும்புகிறார்.<br>நாம் அவருடைய சீடரானால், அவருடைய வேலையிலே பயன்பட முடியும். இந்த வேதாகம சம்பவத்தை போல நாம் அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவருடைய வார்த்தைகள் எங்கே எழுதி வைக்கப்பட்டிருக்கிறது? (வேத புத்தகத்தின் அவசியத்தை விளக்கவும்)<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக: FBI - Jesus calls His first disciples. |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுக்கொடுக்கவும், “மனுசரைப் பிடிக்கிறவர்கள்” என்கிற வார்த்தையை அவர்கள் புரிந்து கொண்டார்களா என்பதை பரிசோதிக்கவும். மத்தேயு 4:19 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. எத்தனை மீனவர்களை இயேசு அழைத்தார்?<br>2. அவர்கள் எங்கே வேலைப்பார்த்துக்கொண்டிருந்தார்கள்?<br>3. அந்திரேயாவின் சகோதரன் யார்?<br>4. அவர்கள் என்ன ஆவார்கள் என இயேசு வாக்குச் செய்தார்?<br>5. பேதுருவும் அந்திரேயாவும் இயேசுவை பின்தொடர சென்ற போது, எதை விட்டு விட்டு சென்றார்கள்?<br>6. இயேசுவின் சீடராவதற்கு பேதுருவுக்கும், அந்திரேயாவுக்கும் விருப்பம் இருந்ததை எப்படி செய்து காட்டினார்கள்?<br>7. இயேசு கண்டுபிடித்த 2வது சகோதரர்கள் யார்?<br>8. இயேசு தங்களிடம் வந்த போது யாக்கோபும் யோவானும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?<br>9. அவர்களோடு படகிலிருந்தது யார்?<br>10. வாக்கியத்தை முடிக்கவும், நாமும் இயேசுவின் சீடராக வேண்டும் என்றால், அவருடைய வார்த்தைகளுக்கு ....................................................... |

## A 3 – கதை 2

இயேசு பேதுருவுக்கு உதவி செய்தல் - பேதுரு தன்னைத்தான் ஒரு பாவி என அறிந்து கொண்ட கதை

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. இயேசுவின் வல்லமை பேதுருவின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தினது.<br>2. இயேசு தேவனுடைய குமாரன், பேதுருவை போல நாமும் அவரை பின்பற்ற விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்:** லூக்கா 5:10<br>**வேத பகுதி :** லூக்கா 5:1-11 |
| **அறிமுகப்படுத்துக:** | பிள்ளைகளிடம் அவர்கள் எதையெல்லாம் நன்றாகச் செய்ய வல்லவர்கள் என்று கேட்கவும். நாமெல்லாருக்கும் செயல் திறன் விசே'மாக உண்டு என்பதை விளக்கவும். பேதுரு மீன் பிடிப்பதில் நிபுனன். அவன் அநேக வருடங்களாய் மீனவனாயிருக்கிறான். ஆனால் இன்றைய கதையிலே, பேதுரு, தான் இயேசுவின் ஆலோசனைகள் இல்லாமல் வெற்றி காணமுடியாது என்பதை கற்றுக்கொள்கிறான். (சில நேரங்களில் பேதுரு சீமோன் என்றும், சீமோன் பேதுரு என்றும் அழைக்கப்படுகிறான் என்பதை விளக்கவும்) |
| **கற்றுத்தருக:** | கடந்த பாடத்தின் பின்னனியை மீண்டும் பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தவும். இன்றைய கதையிலே இயேசு பேதுருவின் படகை பயன்படுத்தி மக்களுக்கு போதிக்கிறார். (லூக்கா 5:1-3)<br>இயேசு பேதுருவுக்கு கட்டளையிடுதல். இயேசு பேதுருவை ஆழத்திற்கு போகும்படி கட்டளையிட்டார். மீன்களை பிடிக்கும்படியாக வலையை போடச் சொன்னார். (லூக்கா 5:4-5) இதைக் குறித்து பேதுருவின் உணர்வுகளை ஆராயவும்.<br>மிகப்பெரிய மீன்பிடி. (லூக்கா 5:6-7) இந்த சம்பவத்திற்கு முந்தைய இராத்திரியிலே நடந்ததைப் பற்றி பிள்ளைகளுக்கு விளக்கவும். இது ஒரு மிகப்பெரிய அற்புதம்! மீன்களை படைத்தவர் அங்கே பேதுருவோடு படகிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய வல்லமையினாலே மீன்கள் பேதுருவின் வலைக்கு வந்தன.<br>பேதுருவின் மனப்பான்மை (லூக்கா 5:8-9) ஒரு புது விதத்திலே பேதுரு இயேசு யார் என்பதை கண்டு கொண்டான். அவர் பேதுரு போல ஒரு சாதாரண மனிதன் அல்ல. அவர் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்து. அவருக்கு முன்பாக நின்ற பேதுரு தான் எவ்வளவு பெரிய பாவி என அறிந்து கொண்டான்.<br>பேதுருவின் புது வேலை (லூக்கா 5:10) இயேசு பேதுருவை பார்த்து இன்று முதல் அவன் மனிதர்களை பிடிப்பவனாவான் என கூறினார். கடந்த வார கதையிலே இந்த கருத்தை புரிந்து கொண்டார்களா என்பதை சோதித்து பார்க்கவும். கர்த்தர் இப்பொழுது பேதுரு செய்வதை விட மேலான ஒரு வேலையை செய்ய தன்னை தெரிந்து கொண்டார் என அறிந்த உடன், எல்லாவற்றையும் விட்டு இயேசுவுக்கு பின் சென்றான். (லூக்கா 5:11)<br>இயேசு தன்னுடைய வல்லமையையும் தம் மகிமையையும் நாம் அறிய வேண்டும் என விரும்புகிறார். நம்முடைய வாழ்க்கையிலே அவரை நம்மோடு வைத்துக்கொள்ள முடியும். நாம் அவரை பின்பற்ற முடிவு செய்தோம் என்றால், அது நம்முடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும். |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுக்கொடுக்கவும். லூக்கா 5:10 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. பேதுருவுக்கு சொந்தமான எதை இயேசு பயன்படுத்தினார்?<br>2. இயேசு ஜனங்களோடு பேசி முடித்தவுடன் பேதுருவைப் பார்த்து என்ன சொன்னார்?<br>3. கடைசியாக பேதுரு எப்பொழுது மீன்பிடிக்கச் சென்றான்?<br>4. இவ்வளவு பெரிய நிலைமையில் மீன்பிடித்த போது பேதுரு எவ்வாறு உணர்ந்தான்?<br>5. இயேசு தேவ குமாரனாக இருக்கிற படியினால், அவர் செய்யும் மிகப்பெரிய காரியங்களுக்கு பெயர் என்ன?<br>6. ஏன் பேதுரு இயேசுவின் பாதத்தில் விழுந்தான்?<br>7. இது முதல் பேதுரு என்ன செய்வான் என இயேசு சொன்னார்?<br>8. கதையின் முடிவில் பேதுருவும், அவன் நண்பர்களும் என்ன செய்தார்கள்?<br>காட்சிப்படுத்துக: ஒரு வேளை ஒரு பள்ளிக்கூடத்தில் இந்த பாடத்தை எடுப்பீர்களேயானால், கத்திரிக்கோள்களை வைத்து மீன்கள் போல் வெட்டி தொங்க விட்டு, மாணவர்கள் இந்த கதையை ஞாபகம் வைக்கலாம். |

## A 3 – கதை 3

இயேசு புயலை அடக்கினார் - இந்த கதை கர்த்தராகிய இயேசுவின் வல்லமையைப் பற்றியது.

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. இயேசு தேவ குமாரனாயிருக்கிறபடியினால், புயலை அடக்கக்கூடியவராயிருந்தார்.<br>2. நாம் இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** மத்தேயு 8:27<br>**வேத பகுதி :** மத்தேயு 8:23-27 |
| **அறிமுகப்படுத்துக:** | பிள்ளைகள் தாங்கள் அறிந்திருக்கிற வானிலை சூழ்நிலைகளைக் குறித்து பேசுங்கள். திடீர் வானிலை மாற்றங்களில் எங்கேயாவது சிக்கியிருக்கிறீர்களா?<br>வேகமான காற்று, மற்றும் புயல் குறித்து ஆலோசிக்கவும். இந்த கதையில் இயேசுவும் சீடர்களும் கலிலேய கடலில் பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். |
| **கற்றுத்தருக:** | அமைதியான ஒரு துவக்கம். சமாதானமான அந்த காட்சியைக் குறித்து விளக்குங்கள் - இயேசு தூங்கி விட்டார். (மத்தேயு 8:23,24)<br>1. புயல், திடீரென மிகப்பெரிய புயல் வந்ததும் சீடர்கள் மிகவும் பயந்தார்கள் (மத்தேயு 8:24) அந்தக் காட்சியை விளக்குங்கள், அந்த சத்தம், அலைகள், படகிலே புகுந்த தண்ணீரை அகற்ற முயற்சி செய்தல் .<br>2. சீடர்களின் பயம். அவர்கள் மூழ்கிவிடப்போகிறார்கள் என நினைத்து அவர்கள் மிகவும் பயந்தார்கள். அவர்கள் இயேசுவை எழுப்பி தங்களை காப்பாற்றும் படியாக வேண்டிக்கொண்டார்கள். (மத்தேயு 8:25) இயேசுவோ சீடர்கள் தன் மேல் குறைந்த விசுவாசம் வைத்ததை கண்டு வருத்தப்பட்டார். விசுவாசத்தைக் குறித:து பிள்ளைகளுக்கு விளக்கம் அளிக்கவும். (மத்தேயு 8:26)<br>3. இயேசுவின் வல்லமை. இயேசு காற்றை அதட்டினார். (மத்தேயு 8:26) மற்றும் (மாற்கு 4:39)யும் பார்க்கவும். புயல் உடனடியாக அமைதியானது என்பதை வலியுறுத்தவும்.<br>5. சீடர்களின் ஆச்சரியம். (மத்தேயு 8:27) காற்றின் மேலும் கடலின் மேலும் அதி-காரமுடைய இவரை கண்ட போது சீடர்கள் இவர் வித்தியாசமானவர் என்பதை அறிந்து கொண்டார்கள்.<br>6. இயேசுவால் காற்றையும் கடலையும் எப்படி அடக்க முடிந்தது என்பதை பிள்ளைகள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அவரே இவைகளை உருவாக்கிய தேவ குமாரன்.<br>7. அவருக்கு எல்லாவற்றின் மேலும் அதிகாரமுண்டு. அவர் எப்பொழுதும் எல்லாவற்றையும் ஆளுகை செய்கிறார் என்பதை பிள்ளைகள் அறிந்து கொண்டு அவரை சார்ந்திருக்க கற்றுக்கொடுக்க வேண்டும்.<br>8. அவரே மெய்யான தேவனுடைய குமாரன் என்பதை நாம் உண்மையாகவே விசுவாசிக்க வேண்டும்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக : FBI - Jesus calms the storm. |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுக்கொடுக்கவும். மத்தேயு 8:27 |
| **ஞாபகப்படுத்துக:** | இந்த சம்பவம் எங்கு நடைபெற்றது?<br>1. யார் முதலில் படகில் பிரவேசித்தது?<br>2. புயல் வந்த போது அலைகள் என்ன செய்தது?<br>3. புயல் வந்த போது இயேசு என்ன செய்தார்?<br>4. ஏன் சீடர்கள் இயேசுவை எழுப்பினார்கள்?<br>5. ஏன் இயேசு சீடர்கள் மேல் வருத்தப்பட்டார்?<br>6. எந்த இரண்டு விசயங்களை இயேசு சரி செய்தார்?<br>7. முக்கிய வசனத்தின் இருப்பிடம் எது?<br>8. ஏன் இயேசுவால் காற்றையும், கடலையும் அதட்ட முடிந்தது?<br>9. இயேசு செய்த அதிசயத்திற்கு கொடுக்கப்பட்ட பெயர் என்ன?<br>செய்து காட்டுக:<br>பிள்ளைகளை படகை போல அமர செய்து புயலை போல சத்தமிட்டு. அந்த சம்பவத்தையே நடித்து காட்ட சொல்லலாம். |

## A 3 – கதை 4

இயேசு பேதுருவை காப்பாற்றினார் - பேதுருவின் சிறிய ஜெபத்தைப்பற்றிய ஒரு கதை

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. பேதுருவின் சிறிய ஜெபத்தின் விளைவாக இயேசு பேதுருவை காப்பாற்றினார்.<br>2. நாம் காப்பாற்றப்பட நாம் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** மத்தேயு 14:33<br>**வேத பகுதி :** மத்தேயு 14:22-33 |
| **அறிமுகப்படுத்துக:** | 1. இயேசு ஜெபம் செய்ய போன போது சீடர்கள் படகு ஏறி பயணம் செய்யத் தொடங்களினார்கள் (மத்தேயு 14:22-23) இயேசுவின் வாழ்க்கையிலே ஜெபத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து விளக்கவும்.<br>2. புயல். (மத்தேயு 14:24) கடந்த பாடத்தில் கற்றுக்கொடுத்த புயலை பற்றிய பாடத்தை ஞாபகப்படுத்தவும். சீடர்கள் புயலில் சிக்கி தவிப்பதை இயேசு அறிந்து அவர்களை சந்திக்க கடலின் மேல் நடு இராத்திரியில் நடந்து சென்றார் (மத்தேயு 14:25-27) சீடர்கள் அதை கண்டு எப்படி உணர்ந்தார்கள் என்பதை விளக்கவும். இயேசுவின் ஆறுதலான வார்த்தைகளை நினைவுக்கூறவும். |
| **கற்றுத்தருக:** | 1. பேதுருவின் விண்ணப்பம். உண்மையாகவே அது இயேசு தானா எனபதை அறியும்படி அவன் இயேசுவை பார்த்து தானும் தண்ணீரின் மேல் நடந்து அவரிடம் வர விண்ணப்பம் கேட்டான். இயேசு “வா” என்று சொன்னார். எனவே பேதுரு கடலின் மேல் நடந்து இயேசுவை நோக்கி சென்றான். (மத்தேயு 14:28-29) ஆனால் பேதுரு சுற்றியிருந்த அலைகளை கண்டு பயந்தான். அப்பொழுது மூழ்க ஆரம்பித்தான்.<br>2. இயேசு பேதுருவை காப்பாற்றினார். இயேசுவை பார்த்து பேதுரு எப்படி ஜெபித்தான் என்பதை பேதுருவின் வார்த்தைகளையே பயன்படுத்தி சொல்லவும். (மத்தேயு 14:30-32) அவர்கள் இருவரும் படகில் ஏறினவுடனே புயல் நின்றது. நடந்த சம்பவத்தைப் பற்றி சீடர்களின் மனநிலை என்ன என்பதை சிந்திக்கவும் (மத்தேயு 14:35)<br>3. பேதுரு மூழ்குவதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். நாம் நம்முடைய பாவ வாழ்க்கையிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். அதை கர்த்தராகிய இயேசு மட்டுமே செய்ய முடியும். நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை அவர்மேல் ஏற்றுக்கொண்டு நமக்காக சிலுவையில் மரித்தார். நாம் அவரை விசுவாசிக்க வேண்டும்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக : FBI – Jesus walks on water |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுக்கொடுக்கவும் - மத்தேயு 14:33<br>பணிந்து கொள்ளுதல் என்றால் என்ன என்பதை விளக்கவும். சீடர்கள் தாங்கள் கற்றுக்கொண்டதை பற்றி மிகுந்த சந்தோஷம் கொண்டார்கள். இந்த சிறு ஜெபத்தை எல்லா மக்களும் சொல்லலாம் என்பதை விளக்கவும்.<br>ஞாபகப்படுத்தவும்:<br>இந்த வினாக்கள் A3 கதைகளிலிருந்து மட்டுமே எடுக்கப்பட்டுள்ளன. உங்களிடம் அட்டைகளிருந்தால், வெவ்வேறு அளவுகளில் மீன்களை போல வெட்டி அவைகளுக்கு பின்பாக புள்ளிகள் கொடுங்கள். இந்த மீன்களை போர்டில் ஒட்டி வையுங்கள். பிள்ளைகள் எதாவது மீனை தெரிந்து கொள்ளலாம். குழுக்களாகப் பிரித்து இந்த வினா விடை நடத்தவும். அதிக புள்ளிகள் பெறும் குழுவே வெற்றிப்பெறும். |
| **ஞாபகப்படுத்துக:** | 1. இந்த கதைகளெல்லாம் எங்கே நடைபெற்றது?<br>2. வசனத்தை முடிக்கவும், “என் பின்னே வாருங்கள், நான் ................................”<br>3. யாரிடம் இயேசு இவ்வார்த்தைகளை கூறினார்?<br>4. அநேக மீன்களை பிடித்தவுடன் பேதுரு செய்தது என்ன?<br>5. வசனத்தை முடிக்கவும். “இவர் எப்படிப்பட்டவரோ ............................................”<br>6. இயேசு மலைகள் மேல் ஏன் சென்றார்?<br>7. சீடர்களை அதிகமாய் பயப்படுத்தியது எது?<br>இந்த கதையில் பேதுரு இயேசுவை பற்றி என்ன கற்றுக்கொண்டான்? |

# A 4 – கதை 1

பேதுரு தூங்கினான் - இந்த கதை இயேசு பிதாவிடம் ஜெபிப்பதை பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. இயேசுவின் வாழ்க்கையில் ஜெபம் மிக முக்கியமான ஒன்றாயிருந்தது.<br>2. நாம் ஜெபிப்பது மிக அவசியம்.<br>**முக்கிய வசனம்:** யோவான் 15:14<br>**வேத பகுதி :** மத்தேயு 26:36-46 |
| **அறிமுகப்படுத்துக:** | 1. பிள்ளைகளுக்கு செய்ய மிக கடினமாயிருக்கும் காரியங்களைப் பற்றி கேட்டறியுங்கள். கவனமாக ஒரு விசயத்தில் அதிக நேரம் செலவிடுவது. ஒரு நிகழ்ச்சியில் தாமதமாகிறது என்றாலும் பொறுமையாக இருப்பது.<br>2. இன்னைய கதையில் இயேசுவுக்கு விசே‘ ஒத்துழைப்பு பேதுருவிடமிருந்து தேவை. பார்ப்போம் பேதுருவால் ஒத்துழைப்பு தர முடிகிறதா என்று. |
| **கற்றுத்தருக:** | 1. இந்த கதையின் பின்னனியை முதலில் விளக்கவும். சீக்கிரத்தில் சிலுவையில் இயேசு மரிக்கப்போகிறார் என்று இயேசு அறிந்திருந்தார். கடைசியாக தன் சீடர்களோடு உணவு அருந்தி முடித்தார். அடிக்கடி இயேசு பிதாவினிடத்தில் ஜெபிப்பதை பழக்கமாக கொண்டிருந்தார். அதுவும் இப்பொழுது அவர் போகப்போகிற பாதைக்காக அவர் ஜெபிப்பது மிக முக்கியம் என அவர் நன்கு அறிந்திருந்தார். அவர் ஒரு தோட்டத்திற்கு தன் சீடர்களை அழைத்து வந்தார். ஆனால் இந்த இரவிலே தன் நெருங்கிய சீடர்களான பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை தன் அருகிலிருக்கும் படி, தன்னோடு விழித்திருந்து ஜெபிக்கும்படி கூறினார்.<br>2. இயேசு பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை தன்னோடு விழித்திருந்து ஜெபிக்கும்படி கூறினார். (மத்தேயு 26:36-37) இயேசு சற்று தூரம் சென்று தன் பிதாவை நோக்கி ஜெபித்தார். இயேசுவின் உணர்வுகளைப் பற்றி சற்று சிந்தியுங்கள். அவரது ஜெபமானது அவர் எல்லாவற்றிலேயும் தன் பிதாவை பிரியப்படுத்த விரும்பினார் என்பதை காட்டுகிறது. (மத்தேயு 26:38-39) ஒரு மணி நேரத்திற்கு பின்னர் பேதுருவும், மற்றவர்களும் தூங்குவதை கண்டார். எவ்வளவு வருத்தமாயிருந்திருக்கும் (மத்தேயு 26:40-41)<br>3. இயேசு இரண்டாம் முறையும் ஜெபித்து திரும்பினார். மறுபடியும் அவர் மற்றவர்கள் தூங்குவதை கண்டார். (மத்தேயு 26:42-43)<br>4. 3ம் முறையும் இயேசு ஜெபித்து திரும்பினபோது அவர்கள் மறுபடியும் தூ ங்குவதை கண்டார். பேதுருவும் மற்றவர்களும் இயேசுவோடு கூட நிற்கவில்லை அதைக் குறித்து ஆலோசிக்கவும். அவர்கள் தங்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். ஆனால் அவர்கள் அந்த நேரத்தை பயன்படுத்தவில்லை. (மத்தேயு 26:44-45)<br>5. அந்த நேரத்தில் இயேசுவை சத்துருவாக பார்த்தவர்கள் அவரை கைது செய்ய வந்தார்கள். (மத்தேயு 26:45-46)<br>6. முடிக்கும் தருவாயிலே ஜெபத்தின் முக்கியத்துவத்தை விளக்கவும். சோதனை-யை ஜெபிக்க தேவனிடத்திலிருந்து பெலன் பெற்றுக்கொள்ள ஜெபம் மிக அவசியம். சில உதாரணங்களையும் தரலாம்.<br>7. பேதுருவும் மற்றவர்களும் இயேசுவுக்கு கீழ்ப்படியவில்லை, நாம் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என இயேசு விரும்புகிறார்.<br>8. ஆனால் இயேசுவோ நம்மை கைவிடவில்லை. அவர் ஜெபித்தார். அந்த பெலத்திலே சிலுவைக்கு சென்று நமக்காக தம் ஜீவனை தந்தார்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக: FBI – Jesus prays in the garden of gethsemane |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுக்கொடுக்கவும். யோவான் 15:14. |
| **ஞாபகப்படுத்துக:** | 1. இயேசு எங்கே ஜெபித்தார்?<br>2. அவரோடு ஜெபிக்கும்படியாக அவர் விரும்பின சீடர்கள் யார்?<br>3. இயேசு என்ன ஜெபித்தார்?<br>4. இயேசு ஜெபிக்கும் போது அவரின் உணர்வுகள் என்ன?<br>5. முதலில் ஜெபிக்கும் போது எவ்வளவு நேரம் ஜெபித்தார்?<br>6. ஏன் சீடர்களால் ஜெபிக்க முடியவில்லை?<br>7. எத்தனை முறை இயேசு அவர்களை ஜெபிக்கச் சொன்னார்?<br>8. இயேசு ஜெபித்து முடித்த பின்பு என்ன நடந்தது?<br>9. முக்கிய வசனத்தின் இருப்பிடம் எது?<br>10. நாம் அவருக்கு கீழ்ப்படிந்தால், நம்மை இயேசு எப்படி அழைப்பார்? |

## A 4 – கதை 2

சண்டை போடும் பேதுரு - இயேசு கைது செய்யப்பட்ட பின் நடந்ததைப் பற்றிய ஒரு கதை

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. தம்மை பிடித்துக்கொள்ளவும், நமக்காகக் கொல்லப்படவும் இயேசு தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்.<br>2. நம் வாழ்க்கையில் கோபத்தை சரியாக கையாள வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** எபேசியர் 4:26<br>**வேத பகுதி :** மத்தேயு 26:47-56 |
| **அறிமுகப்படுத்துக:** | முந்தைய பாடத்தில் தோட்டத்தில் என்ன நடந்தது என்பதை திரும்பவும் நினைத்துப் பார்க்கவும். பேதுருவும் அவன் நண்பர்களும் இயேசு தங்களுக்கு சொன்னது போல ஜெபிக்கவில்லை. இன்னும் கடினமான சம்பவங்கள் காத்திருக்கின்றன. இனி என்ன செய்ய போகிறார்கள்? |
| **கற்றுத்தருக:** | இந்த சம்பவத்திற்கான காட்சியை அமையுங்கள். அது இருளான நேரம் மற்றும் அமைதியான நேரம். ஆனால் திடீரென்று காலங்களின் இரைச்சல் கேட்டது. இப்பொழுது பேதுருவும் அவன் நண்பர்களும் என்ன நினைத்திருப்பார்கள்?<br>திடீரென அந்த தீய கூட்டத்திலிருந்து யூதாஸ் வெளியே வந்து இயேசுவை முத்தமிட்டான். யூதாஸ் யார் என்பதையும், இவ்வன்னமாய் தான் அவன் சிப்பாய்களுக்கு இயேசு யார் என்று அடையாளப்படுத்த நினைத்தான் என்பதையும் பிள்ளைகளுக்கு விளக்கவும். காட்டிக்கொடுத்தல் என்றால் என்ன என்பதை விளக்கவும். (2ம் நிலை பைபிள் டைம்மை பார்க்கவும்) (மத்தேயு 26:47-50)<br>இயேசு பிடிக்கபட்டார் என்று பேதுரு கண்டபோது அவன் மிகவும் கோபம் அடைந்து அவரை பாதுகாக்க ஒருவனை தாக்கினான். (மத்தேயு 26:51) நாமும் மிக எளி-தாக கோபமடைவோம். ஆனால் இயேசு உடனடியாக பேதுருவின் பட்டயத்தை அதன் உரையில் போட சொன்னார். பேதுரு இயேசுவை பாதுகாக்க தேவையில்லை என்பதை உணர்த்தினார். காரணம் இவையெல்லாம் தேவனுடைய சித்தத்தின்படியே நடைபெறுகிறது. இயேசு தன்னை கைது செய்யும்படியாகவும் அவரை கொலை செய்யும்படியாக தம்மைத் தாமே கொடுத்தார். பிதாவினிடம் ஜெபித்த பிறகு இயேசு மிக அமைதியானார். ஆனால் ஜெபிக்காத பேதுருவால் அமைதியாக இருக்க முடியவில்லை (மத்தேயு 26:52-56)<br>பயந்த சீடர்கள் இயேசுவை விட்டு விட்டு ஓடி விட்டார்கள். ஏன் அப்படி செய்தார்கள்? (மத்தேயு 26:56) பேதுரு மாத்திரமே இயேசுவை பின்பற்றினான். ஆனால் அவன் தான் கைது பண்ணப்படாதபடிக்கு சற்று தொலைவிலேயே பின்பற்றினான். (மத்தேயு 26:58)<br>நாம் இயேசுவினுடையவர்களானால், நாம் அவரிடத்தில் ஜெபித்து நாம் கோபப்படாமல் சுய அடக்கமுடையவர்களாகவும் இருக்க முடியும். ஒரு கிறிஸ்தவனுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் சரியாக நடந்துக்கொள்ள பெலன் தருவார்.<br>கோபப்படாமல் சண்டையிடாமல் ஒரு விசயத்தை எதிர்கொள்ளும் போது அந்த சூழ்நிலை எப்படி மாறும் என சிந்திக்கவும்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக: FBI – Jesus prays in the garden of gethsemane |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுத்தரவும். எபேசியர் 4:26. நாம் கோபப்பட்டால், சீக்கிரமாய் மாறிவிடுவது அவசியம். |
| **ஞாபகப்படுத்துக:** | 1. இயேசுவின் எதிரிகளோடு வந்தது யார்?<br>2. இவர் தான் இயேசு என்று மற்றவர்களுக்கு யூதாஸ் எப்படி அடையாளப்படுத்தினான்?<br>3. இயேசு பிடிக்கப்பட்டப்போது பேதுரு எதை எடுத்தான்?<br>4. பேதுரு எதை வெட்டினான்?<br>5. இயேசு பேதுருவுக்கு என்ன சொன்னார்?<br>6. ஒரு கிறிஸ்தவன் கோபத்தை எப்படி ஜெயிக்க முடியும்?<br>7. இயேசு பிடிக்கப்பட்டப்போது சீடர்கள் என்ன செய்தார்கள்?<br>8. இயேசுவை சற்று தொலைவில் பின்தொடர்ந்தது யார்?<br>9. செய்து காட்டுக:<br>10. சிலர் கோபப்படும் தருணங்களை போல நடித்துக்காட்டலாம். |

# A 4 – கதை 3

## பேதுரு மறுதலித்தான் - மன்னிப்பின் தேவையை உணர்த்தும் கதை

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:*** சில நேரங்களில் நாம் தைரியமற்றவர்களாக மாளி நம் நண்பர்களை விட்டுவிடுகிறோம். நாம் கர்த்தர் இயேசுவை துக்கப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் போதும், அவர் நம்மை மன்னிக்க விருப்பமுடையவராயிருக்கிறார்.<br>**முக்கிய வசனம்:** சங்கீதம் 51:7<br>**வேத பகுதி :** மத்தேயு 26:69-75 |
| **அறிமுகப்படுத்துக:** | மற்றவர்களுடைய சத்தம்கேட்டு அவர்களை இன்னார் என அடையாளப்படுத்திக்கொள்ளும் திறனை பற்றி சிந்தியுங்கள். பிள்ளைகள் போன் பயன்படுத்துகிறவர்களாயிருந்தால் யாரும் அவர்களுக்குச் சொல்லாமலேயே சத்தம் மட்டும் கேட்டு அவர்கள் இன்னார் என கண்டுக்கொள்வார்கள். ஒரே பாஷ'யையே ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒவ்வொரு விதத்தில் பேசுவார்கள். சில உதாரணங்களைக் கொடுக்கவும்.<br>சென்ற வார கதையோடு மீண்டும் தொடர்புப்படுத்தவும் - இயேசுவை கைது செய்ததைப்பற்றி பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தவும், மற்றும் சீடர்கள் அவரை விட்டு விட்டு ஓடிப்போனதை நினைவுப்படுத்தவும். ஆனால் இயேசுவுக்கு என்ன ஆகப்போகிறது என அறிந்து கொள்வதில் பேதுருவுக்கு ஆர்வம் இருந்தது. |
| **கற்றுத்தருக:** | பிரதான ஆசாரியனுடைய வீட்டின் முற்றம் வரைக்கும் பேதுரு வந்தான். (மத்தேயு 26:69) முற்றம் என்பது வீட்டிற்கு வெளியே இருக்கும் ஒரு இடம். கூடுமானால் ஒரு வீட்டின் முற்றத்தைக் காட்டிக் கூறவும். காட்சி ஏற்படுத்தவும் - குளிர்ந்த இரவு, நெருப்பு, காவலாலர்கள், வேலைக்காரர்கள் .<br>ஒரு வேலைக்கார பெண் பேதுருவை அடையாளம் கண்டு கொண்டு, மற்றவர்களிடம் பேதுருவும் இயேசுவோடிருந்து வந்தான் என்றாள். பேதுரு தனக்கு அவள் என்ன பேசுகிறாள் என்று கூட விளங்கவில்லை என்றான். (மத்தேயு 26:69-70) பேதுரு பொய் சொன்னான் என்பதை பிள்ளைகளுக்கு விளக்கவும். அவன் நிச்சயமாக இயேசுவோடு இருந்தவன் தான் ஆனால் அவன் ஏன் பொய் சொன்னான்?<br>பேதுரு சற்று தள்ளிபோன உடனே, இன்னொரு வேலைக்கார பெண் அவனைப் பார்த்தாள். மறுபடியும் பேதுரு இயேசுவை தனக்கு தெரியாது என மறுதலித்தான். (மத்தேயு 26:71-72) இரண்டாம் நிலை பிள்ளைகளுக்கு "மறுதலித்தல்" என்கிற வார்த்தைக்கு அர்த்தம் சொல்லவும்.<br>சற்று நேரத்திற்கு பின்பு யாரோ பேதுரு இயேசுவின் சீடர்களை போலவே பேசுகி-றான் என சொன்னார்கள். (பேதுரு கலிலேயா மாகாணத்தை சேர்ந்தவன்) பேதுரு எவ்வளவு பயத்தோடு இருந்தால், 3ம் முறையாக இயேசுவை மறுதலித்திருப்பான்.<br>அப்பொழுது சேவல் கூவியது. உடனே பேதுரு இயேசு தனக்கு முன்னமே கூறியிருந்ததை நினைவுகூர்ந்தான் (மத்தேயு 26:34). ஏன் பேதுரு மிகவும் வருத்தப்பட்டான்? விளக்கவும் (மத்தேயு 26:74-75)<br>பேதுரு செய்தது ஒரு மிகப்பெரிய தவறுதான். அவன் தான் இயேசுவோடு இருந்தவன் என்று ஒத்துக்கொள்ள தைரியமில்லாமலிருந்தான். நாமும் தவறு செய்பவர்கள் தான். நாமும் அநேக முறை இயேசுகிறிஸ்துவை நம்முடைய சொல்லினாலும் செயலினாலும் மறுதலிக்கிறோம். ஆனால் நாம் செய்த தவறுகளை மன்னிக்க இயேசு எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார். அவரால் அதை செய்ய முடியும் ஏனென்றால், அவர் நமது பாவங்களுக்காக சிலுவையிலே மரித்திருக்கிறார்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக: FBI – Peter denies Jesus |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுக்கொடுக்கவும். சங்கீதம் 51:7. இது ஒரு ஜெபம் என விளக்கவும். நம்முடைய பாவங்களுக்காக நாம் மன்னிப்பு கேட்கும் போது அவர் நம்மை மன்னித்து நம்மை சுத்தமாக்கி வெண் பனியைப் போல மாற்றுவார் -அவசிய-மானால், வெண் பனி என்றால் என்ன என்பதை விளக்கவும். |
| **ஞாபகப்படுத்துக:** | 1. பேதுரு எங்கே காத்திருந்தான்?<br>2. பேதுருவிடம் பேசிய முதல் நபர் யார்?<br>3. எத்தனை முறை பேதுரு இயேசுவை எனக்கு தெரியாது என்று சொன்னான்?<br>4. ஏன் இந்த பொருட்களை பேதுரு சொன்னான்?<br>5. எத்தனை முறை சேவல் கூவியதை பேதுரு கேட்டான்?<br>6. ஏன் பேதுரு அழுதான்?<br>7. நாமும் இயேசுவை மறுதலித்தால், செய்ய வேண்டியது என்ன? |

# A 4 – கதை 4

பேதுரு அன்புகூறுகிறான் - இந்த கதை இயேசு மற்றும் பேதுருவின் உரையாடலைப் பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>பேதுரு இயேசுவை மறுதலித்த பின் இயேசுவின் மேலுள்ள தனது அன்பை காட்ட அவனுக்கு மற்றொரு வாய்ப்பு தரப்படுகிறது.<br>நாம் அவரில் அன்புக்கூற வேண்டும் என கர்த்தர் விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்:** 1யோவான் 4:19<br>**வேத பகுதி :** யோவான் 21:1-19 |
| **அறிமுகப்படுத்துக:** | பேதுருவைப்பற்றி பிள்ளைகள் கேட்ட முதல் கதையைக் குறித்து சிந்திக்கச் சொல்லவும். இயேசு பேதுருவை முதன் முதலில் அழைத்த போது அவனது தொழில் என்ன?<br>அந்த நாள் முதல் நிறைய விசயங்கள் நடைபெற்றுவிட்டன. பேதுரு இயேசுவின் முக்கிய நண்பர்களில் ஒருவனாயிருந்தாலும், பேதுரு இயேசுவை வருத்தப்படுத்தினான். (கடைசி 3 கதைகளை நினைவுகூருங்கள்.)<br>அதன் பின்பு இயேசு சிலுவையில் மரித்து உயிரோடெழுந்து விட்டார். இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இயேசு தம்முடைய சீடர்களுக்கு தம்மை உயிர்த்தெழுந்தவராக காண்பித்தார். இவை நடந்த பின்பு, மறுபடியும் பேதுரு மீன்பிடிக்கச் சென்றான். |
| **கற்றுத்தருக:** | சீடர்கள் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் பிடிக்கவில்லை! (யோவான் 21:3) அவர்கள் உணர்வுகள் எப்படி இருந்திருக்கும்? சோர்வு, பசி, ஏமாற்றம்.<br>சம்பவத்தை காட்சிப்படுத்தவும் - அதிகாலை சூரியன், கரையில் யாரோ ஒருவர். சீடர்களுக்கும், அந்த யாரோ ஒருவருக்கும் இடையில் நடந்த உரையாடலை நினைவுப்படுத்துக. (யோவான் 21:4-6)<br>அந்த யாரோ ஒருவரின் வார்த்தையை கேட்ட போது திரளான மீன்களை (153) பிடித்தார்கள். உடனே யோவானுக்கு அது இயேசு என்று புலப்பட்டது. பேதுரு மிகவும் உணர்ச்சி வசப்பட்டு கடலில் குதித்து நீந்தி போய் இயேசுவை சந்தித்தான். (யோவான் 21:7-8)<br>இயேசு அவர்களுக்கு காலை உணவை ஆயத்தம் பண்ணினார். (யோவான் 21:9-14) காலையில் கடற்கரையில் அமர்ந்து காலை உணவை உண்ணும் போது அங்கு இயேசுவோடிருந்து சாப்பிடுவது எப்படியிருக்கும் சிந்தித்து பாருங்கள்.<br>உணவு உண்ட பின் இயேசு பேதுருவோடு பேசினார். 3 முறை தன்னை பேதுரு நேசிக்கின்றானா என்று கேட்டார். (யோவான் 21:15-19) இந்த உரையாடல் பேதுருவுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை விளக்கவும். கர்த்தராகிய இயேசு பேதுருவை மன்னித்து அவனுக்காக ஒரு சிறப்பு வேலையை வைத்திருந்தார். நிலை 2 பிள்ளைகளுக்கு பேதுரு 3 முறை மறுதலித்ததையும், 3 முறை இயேசு தன்னோடு பேசுவதின் முக்கியத்துவத்தை உணர்த்தலாம்.<br>இயேசுவின் மேல் பிள்ளைகளின் அன்பை பற்றியும் சவால் விடலாம்<br>இயேசு பேதுருவை பார்த்து கேட்ட கேள்வியை பிள்ளைகளை பார்த்துக் கேட்டால், எப்படி பதில் சொல்வார்கள் என்பதை கேட்கவும். நாம் ஒவ்வொருவரும் அவரை நேசித்து அவரை சேவிக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.<br>தேவன் நம்மை நேசித்து தமது குமாரனை நமது பாவங்களுக்காக மரிக்கும்படியாய் நமக்காக தந்தார். எனவே நாமும் அவரை மிகவும் நேசிக்க வேண்டும்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக : FBI – Jesus appears to the Disciples in Galilee, Jesus questions Peter. |
| **கற்றுக்கொள்ளுக:** | கற்றுக்கொள்ளுக: முக்கிய வசனத்தை விளக்கத்தோடு கற்றுத்தரவும். 1யோவான் 4:19 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. பேதுருவும் அவனது நண்பர்களும் எவ்வளவு நேரம் மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள்?<br>2. வலையை எந்தப்பக்கம் வீசவேண்டும் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது?<br>3. எத்தனை மீன்களை அவர்கள் பிடித்தார்கள்?<br>4. அவர் இயேசு என்று முதலில் அறிந்து கொண்டது யார்?<br>5. இயேசுவிடம் முதலில் செல்ல வேண்டும் என எண்ணியது யார்?<br>6. பேதுரு கடலில் குதிக்கும் முன் செய்தது என்ன?<br>7. யார் அவர்களுக்கு காலை உணவை தயார் செய்தது?<br>8. அவர்கள் சாப்பிட்ட காலை உணவு என்ன?<br>9. 3 முறை இயேசு பேதுருவிடம் கேட்ட கேள்வி என்ன?<br>10. முக்கிய வசனத்தின் இருப்பிடம் என்ன?<br>நடித்து காட்டுக: இந்த சம்பவத்தின் பகுதியை நடித்து காட்டலாம். (எ.கா. மீன் பிடிப்பது, கரையில் யாரோ நிற்பதை கண்டறிவது, கடலில் குதிப்பது, மீன் அகப்பட்ட வலையை இழுப்பது, மீன்களை எண்ணுவது) முகப்பாவனைகளை நடித்து காட்டுவது (எ.கா. ஏமாற்றம், ஆச்சரியம், மகிழ்ச்சி இந்த சம்பவத்தை வேதாகமத்தில் படித்து காட்டி பிள்ளைகளை ஆங்காங்கே நடிக்கச் சொல்லலாம். |

## **A 5 –** கதை **1**

ஆபிராம் தன் வீட்டை விடுகிறான் - இந்த கதை ஆபிராம் தேவனை நம்புவதை பற்றியது.

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. தன் சொந்த இடமான ஊர் என்கிற இடத்தை விட்டு தேவனை நம்பி அவன் இன்னோர் இடத்துக்கு குடிமாற்றம் செய்கிறான்.<br>2. அவருக்கு கீழ்ப்படிவதன் மூலமாக நாம் தேவன் மேல் வைத்திருக்கிற நம்பிக்கையை காட்ட வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** நீதிமொழிகள் 3:5<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 12:1-9 |
| **அறிமுகப்படுத்துக:** | வீட்டை காலி செய்து வேறு வீட்டிற்கு போவதைக் குறித்து பிள்ளைகளுக்கு அனுபவம் இருந்தால், பேசுங்கள்.<br>வீட்டை விட்டு மிக வேகமாக வேறு ஒரு நாட்டிலே போய் வாழ வேண்டிய சூழ்நிலை வந்தால் எப்படி உணர்வீர்கள்? என்று கேட்கவும். உணர்ச்சிவசம்? கவலை? சந்தோடம்? ஒவ்வொன்றிற்கும் காரணம் கூறவும்.<br>ஆபிராமை அறிமுகம் செய்து, ஊர் என்கின்ற அவனது இடத்தை பற்றியும், நண்பர்கள், உறவினர்கள் என்று அவன் வாழ்ந்த வாழ்க்கையும் கற்பனை செய்யவும். அவன் நல்ல வாழ்க்கையை வாழ்ந்தான். |
| **கற்றுத்தருக:** | ஒரு நாள் தேவன் ஆபிராமிடம் “உன் வீட்டை விட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ” என்றார். (ஆதியாகமம் 12:1) ஆபிராமுக்கு மிக கடினமாய் இருப்பது எது? (அவன் தான் வாழ்ந்த நல்ல வாழ்க்கையை விட்டு போவது)<br>தேவன் ஆபிராமுக்கு வாக்குகள் கொடுத்தார் (ஆதியாகமம் 12:2-3) தேவன் தந்த வாக்குறுதிகள் எல்லாம் மிக நன்மையானவை என்பதை பிள்ளைகளுக்கு விளக்கவும். எ.கா. பெரிய தேசம் மற்றும் பெருமையான பேர். தேவன் ஆபிராமை ஆசீர்வதிக்க விரும்பினார். ஒருவரை தேவன் ஆசீர்வதிக்கும் போது அவரது நன்மையை அவர்களுக்கு காட்டுகிறார்.<br>ஆபிராம் தேவனுக்கு கீழ்ப்படிந்தான். (ஆதியாகமம் 12:4) ஏன் ஆபிராம் கீழ்ப்படிந்தான் என்று நினைக்கிறீர்கள்? (அவன் தேவனுடைய வாக்குறுதிகளை நம்பினான்)<br>ஆபிராமோடிருந்தது யார்? – சாராய் ஆபிராமின் மனைவி, மற்றும் உறவினரான லோத்து, ஆபிராமின் வேலைக்காரர்கள், மற்றும் தேவனும் அவர்களோடிருந்தார். அவர்கள் ஒட்டகங்களில் பிரயாணப்பட்டு, கூடாரங்களிலே தங்கி இப்படி அவர்கள் வனாந்திரப் பகுதிகளிலே பிரயாணப்பட்டு போயிருப்பாகள்.<br>கடைசியிலே ஆபிராம் கானான் தேசத்திற்கு வந்து சேர்ந்தான். (ஆதியாகமம் 12:6-9) இப்பொழுது ஆபிராம் எப்படி உணர்ந்திருப்பான்? பலிபீடம் கட்டுவது தேவனுக்கு நன்றி சொல்லும் ஒரு செயலாகும்.<br>தேவனை நாம் நம்ப வேண்டிய தருணங்களைப் பற்றி பேசுங்கள். அவரை நாம் முழுமையாக நம்ப வேண்டும். நம்முடைய காரியங்களில் நாம் நம்முடைய சுய புத்தியின் மேல் சாயாமல் தேவனை சார்ந்து கொள்ள வேண்டும்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக : FBI – Abraham movers to Canaan. |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுக்கொடுக்கவும். நீதிமொழிகள் 3:5 இந்த வசனம் ஆபிராம் செய்ததை நமக்கு கற்றுத்தருகிறது என்பதை விளக்கவும். |
| **ஞாபகப்படுத்துக:** | கீழேக் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியா அல்லது தவறா என குறிப்பிடுக:<br>1. தேவன் ஆபிராமோடு பேசினார்.<br>2. பஞ்சம் வந்ததால் ஆபிராம் தன் சொந்த இடத்தை விட்டு போனான்.<br>3. ஆபிராமை ஆசீர்வதிக்க தேவன் வாக்குக்கொடுத்தார்.<br>4. ஆபிராம் தன் வீட்டை விடும்போது 70 வயது.<br>5. ஆபிராமுக்கு தான் எங்கே போகிறான் என்பது தெரியும்.<br>6. ஆபிராமுக்கு லோத்து என்னும் ஒரு மகன் இருந்தான்.<br>7. தேவன் ஆபிராமை கானான் தேசத்திற்கு வழி நடத்தினார்.<br>8. புதிய தேசத்தில் ஆபிராம் ஒரு வீட்டிலே குடியிருந்தான்.<br>9. ஆபிராம் தேவனை நம்பினதினால், அவருக்கு கீழ்ப்படிந்தான்<br>10. தேவன் நாம் அவரை நம்பி அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என விரும்புகிறார். |

# A 5 – கதை 2

ஆபிராமும் லோத்தும் - இந்த கதை லோத்தின் தன்னலத்தை பற்றியது

***நாம் கற்றுக்கொள்வது:***
லோத்தின் தன்னலத்தினால் வந்த திட்டம் ஒரு மோசமான திட்டமாய் மாறியது. நாம் சரியானதை தேர்வு செய்வது அவசியம்.
**முக்கிய வசனம்:** பிலிப்பியர் 4:19 அல்லது ஆதியாகமம் 13:15
**வேத பகுதி :** ஆதியாகமம் 13:1-18

**அறிமுகப்படுத்துக:**

எந்த ஒரு காரியத்திலும் மற்றவர்களை முதலில் தேர்வு செய்ய அனுமதித்து பிறகு நாம் தேர்வு செய்வது சிறந்தது என்பதை பற்றி பேசவும். அந்த கலாச்சாரத்துக்கேற்ற வகையில் விளக்கம் கொடுக்கவும். வாதாடுவது, முறுமுறுப்பது நமது நட்புகளை பாதிக்கும் என்பதை பற்றி பேசவும்.

**கற்றுத்தருக:**

ஆபிராமின் வேலைக்காரரும், லோத்தின் வேலைக்காரரும் தங்கள் மந்தைகளை எங்கே மேய விடுவது என்பதைப்பற்றி வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். (ஆதியாகமம் 13:5-7)
வாக்குவாதம் பண்ணுவது சரியானதல்ல என்பதை ஆபிராம் அறிந்திருந்தான். எனவே தன் மந்தைகளை மேய்க்கவும் தான் வசிக்கவும் தனக்கென்று ஒரு இடத்தை தெரிந்து கொள்ள லோத்துக்கு முதலிடம் அளித்தான் (ஆதியாகமம் 13:8-9)
அந்த இடங்களின் இயற்கை நிலக்காட்சிகளை படங்களைக் கொண்டு பிள்ளைகளுக்கு விளக்கவும். லோத்து தெரிந்தெடுத்த இடம் யோர்தானின் சமவெளி, அங்கே நிறைய பசும்புல் இருந்தது. எனவே லோத்து தனக்கு மிக செழிப்பான இடத்தை தெரிந்து கொண்டான்.
லோத்தின் தெரிந்தெடுப்பு (ஆதியகமம் 13:10-13) ஏன் லோத்து இந்த இடத்தை தெரிந்தெடுத்தான்? (அவன் தனக்கு எது நல்லது என்று தோனிற்றோ அதையே செய்தான்) லோத்து பேராசை பிடித்தவனாகவும், தன்னலம் மிகுந்தவனாகவும் இருந்தான்.
நாமும் அப்படி இருக்கக்கூடும். லோத்தின் தெரிந்தெடுப்பு சரியானதாக அமையவில்லை காரணம் அவன் தெரிந்தெடுத்த இடத்தில் வாழ்ந்த மனிதர்கள் தேவனுக்கு பயப்படவில்லை. தேவனுக்கு பிரியமானவர்களாக வாழவில்லை.
ஆபிராமும் லோத்தும் பிரிந்தார்கள் ஆனால் தேவன் ஆபிராமுக்கு வாக்குக் கொடுத்தது என்னவென்றால், நிச்சயம் ஒரு நாள், ஆபிராமுக்கு அவன் காண்கின்ற எல்லா இடத்தையும் சொந்தமாக தருவார் என்று. (ஆதியாகமம் 13:14-18)
ஒரு வேளை நீங்கள் ஆபிராமாயிருந்தால், எப்படி உணர்ந்திருப்பீர்கள். ஏமாற்றத்தை உணர்ந்திருப்பீர்கள், (ஆபிராமுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதிகள் லோத்தின் தெரிந்தெடுப்புகளை விட சிறந்தவை என்பதை பிள்ளைகளுக்கு உணர்த்துங்கள்) லோத்து ஒரு மோசமான தெரிந்தெடுப்பு செய்தான். ஆனால் நாமோ சரியானதை தெரிந்தெடுக்க வேண்டும். நாம் செய்ய வேண்டிய சிறந்த தெரிந்தெடுப்பு, நம் கர்த்தர் இயேசுவை நம்மோடு நம் பாவங்களை மன்னிக்கும் படியாக அழைப்பது தான்.
நமக்கு எது சிறந்தது என்று தேவனுக்கு நன்றாக தெரியும். ஆபிராமுக்கு என்ன தேவையோ அதை தந்த தேவனுக்கு நமது வாழ்விலும் என்ன தேவை என்பதை அறிந்து நமக்கு அவைகளை தர அவருக்கு தெரியும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.
தேவன் தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவார் என்று நாம் நிச்சயம் நம்பலாம்.
பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்:
காட்டுக : FBI – Abraham and Lot separate.

**கற்றுக்கொள்ளுக:**

முக்கிய வசனத்தை கற்றுக்கொடுக்கவும் ஆதியாகமம் 13:15 அல்லது பிலிப்பியர் 4:19. இந்த கதையில் ஆபிராம் தேவனுக்கு ஒரு பலிபீடத்தை கட்டினான். இந்த கேள்விகளுக்கு பதில் சரியாக சொல்லும் ஒவ்வொரு நபருக்கும் சில கற்களை தரவும். முடிவில் யார் பலிபீடத்தை கட்டுவதற்கு அதிக கற்களை வைத்திருக்கிறார்களோ அவர்களே ஜெயித்தவர்கள் (ஆதியாகமம் 13:1-6)

**ஞாபகப்படுத்துக:**

1. ஆபிராம் ஒரு செல்வந்தன் என நமக்கு எப்படி தெரியும்?
2. வாக்குவாதத்தை முடிக்க வேண்டும் என் நினைத்தது யார்?
3. யாருக்கு முதல் வாக்குக் கொடுக்கப்பட்டது?
4. எந்த நதியை லோத்து கண்டான்?
5. எந்த திசையில் லோத்து சென்றான்?
6. லோத்து தெரிந்தெடுத்த இடத்தில் சரியில்லாதது எது?
7. தேவன் ஆபிராமை எங்கே பார்க்கச் சொன்னார்?
8. தேவன் ஆபிராமுக்கு என்ன வாக்குக் கொடுத்தார்?
9. ஆபிராம் கட்டின பலிபீடத்தில் என்ன செய்தான்?
10. நாம் நமது வாழ்க்கையில் செய்யும் முக்கிய தெரிந்தெடுப்பு எது?

## A 5 – கதை 3

தேவன் ஆபிராமுக்கு வாக்குறுதி தருகிறார் - இந்த கதை தேவனின் வாக்குறுதிகளை நம்புவதை பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. தேவனுக்கு நமது எதிர்காலம் நன்கு தெரியும் எனவே நடக்கப்போகும் காரியங்களை நமக்கு வாக்குறுதிகளாகக் கொடுக்க முடியும்.<br>2. நாம் அவரது வாக்குறுதிகளை நம்ப வேண்டும் என அவர் எதிர்ப்பார்க்கிறார்.<br>**முக்கிய வசனம்:** 1கொரிந்தியர் 10:13 அல்லது ஆதியாகமம் 15:6<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 15:1-7 |
| **அறிமுகப்படுத்துக:** | ஏதாவது வாக்குறுதி பற்றிய ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்லுங்கள். அந்த வாக்குறுதியை நம்புவது மிக முக்கியம் எனவும், அந்த வாக்குறுதி நடக்க போகும் நாள் வரை அதற்காக காத்திருப்பதைப் பற்றியக் காரியத்தை விளக்கவும். (சொன்ன வாக்கை சில சூழ்நிலையினால் காப்பாற்ற முடியாத ஒரு உதாரணத்தையும் சொல்லுங்கள்) மனிதர்களாக இருக்கும் நாம் ஒருவேளை வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல் போகலாம் ஆனால், தேவன் நிச்சயம் காப்பாற்றுவார். |
| **கற்றுத்தருக:** | தேவன் ஆபிராமுக்கு சொப்பனத்திலே ஒரு மகனை தருவதாக வாக்குறுதி அளித்தார். (ஆதியாகமம் 15:1,4) இந்த கனவை முன்னர் தேவன் சொன்ன வாக்குறுதிகளோடு ஒப்பிடவும். இந்த உன்னதமான செய்தி ஆபிராமுக்கு அவரது 90வது வயதிலே கொடுக்கப்படுகிறது.<br>தேவன் ஆபிராமுக்கு வானத்தின் நட்சத்திரங்களைக் காட்டி அவனது வம்சம் அவ்வளவாய் இருக்கும் என வாக்கு செய்தார். (ஆதியாகமம் 15:5) நட்சத்திரங்களை எண்ணுவதின் கடினத்தை உணர்த்தவும். தேவனுடைய உன்னத படைப்பை விளக்கவும்.<br>ஆபிராம் தேவனுடைய வாக்குறுதியின் மேல் நம்பிக்கை வைத்தான். (ஆதியாகமம் 15:6) ஆபிராம் ஏன் தேவனுடைய வாக்குறுதியின் மேல் நம்பிக்கை வைத்தான் என்பதை சிந்தியுங்கள்.<br>தேவன் ஆபிராமுக்கும் சாராய்க்கும் புதுப் பெயர்களைக் கொடுத்தார். (ஆதியாகமம் 17:5,15) ஆபிராமின் புதுப் பெயர் ஆபிரகாம், அதன் அர்த்தம் “அநேகருக்கு தகப்பன்”. எனவே அவன் எப்பொழுதும் தேவனுடைய வாக்குறுதிகளை ஞாபகம் வைக்க முடியும்.<br>தேவனுடைய வார்த்தையில் தேவன் நமக்கு வாக்குறுதிகளை வைத்திருக்கிறார். தேவனுடைய சில வாக்குத்தத்தங்களைச் சொல்லி அவர் மேல் நம்பிக்கையாயிருக்க கற்றுக்கொடுக்க வேண்டும்.<br>தேவன் சொல்லுவதை நாம் கீழ்ப்படியும் போது தேவன் நம்மேல் பிரியமாயிருக்கிறார்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக : FBI – God’s Promise to Abraham. |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுக்கொடுக்கவும் கொரிந்தியர் அல்லது ஆதியாகமம் |
| **ஞாபகப்படுத்துக:** | 1. அவன் எதற்கு தலைவனாயிருப்பான் என தேவன் ஆபிராமுக்கு வாக்குப்பண்ணினார்?<br>2. சொப்பனத்திலே அல்லது தரிசனத்திலே ஆபிராமுக்கு தேவன் வாக்குப்பண்ணினது என்ன?<br>3. ஆபிராமின் மனைவி யார்?<br>4. தேவன் ஆபிராமுக்கு காட்டியது என்ன?<br>5. தேவன் நட்சத்திரங்களை எதனோடு ஒப்பிட்டார்?<br>6. தேவன் ஆபிராமுக்கு வாக்குறுதி அளித்த பின்பு ஆபிராம் செய்தது என்ன?<br>7. ஆபிராமின் புதிய பெயர் என்ன?<br>8. சாராயின் புதிய பெயர் என்ன?<br>9. தேவனுடைய வாக்குறுதிகளை நாம் கற்றுக்கொள்ளும் போது நாம் என்ன செய்ய வேண்டும் என தேவன் எதிர்ப்பார்க்கிறார்?<br>10. “நம்பிக்கை” என்பதற்கு என்ன அர்த்தம்? |

# A 5 – கதை 4

ஆபிரகாமும் அவன் விருந்தினர்களும் - இந்த கதை தேவனுடைய வாக்குறுதிகள் நிறைவேறுவதை பற்றியது.

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. தேவன் தமது செய்தியாளர்களை பல வழிகளில் அனுப்புகிறார், அதுவும் பைபிள் எழுதப்படுவதற்கு முன்னே. 3 முக்கிய செய்தியாளர்கள் இந்த செய்தியை ஆபிரகாமுக்கு கொண்டு வந்தார்கள்.<br>2. தேவன் தமது வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவர் – அவரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை<br>**முக்கிய வசனம்:** ஆதியாகமம் 18:14<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 18:1-15 |
| **அறிமுகப்படுத்துக:** | உங்களுடைய கலாச்சாரத்தில் திடீரென இரு விருந்தாளி வந்தால் என்ன நடக்கும் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். இதைக் குறித்து தெளிவுப்படுத்த ஒருவர் திடீர் விருந்தாளி போல நடித்து விளக்கமளிக்கலாம்.<br>ஆபிரகாமிடத்திலே விருந்தாளிகள் வரும் சம்பவத்தை காட்சிப்படுத்துக – மத்தியானத்திலே ஆபிரகாம் கூடார வாசலிலே அமர்ந்து கொண்டிருக்கிறான் .............................. அப்பொழுது சிலர் வருவதை கண்டான். அவர்கள் யாராக இருக்கக் கூடும்? |
| **கற்றுத்தருக:** | ஆபிரகாம் தனது விருந்தாளிகளை வரவேற்றான், மற்றும் அவர்களுக்கு தண்ணீரும் உணவையும் கொடுத்தான். (ஆதியாகமம் 18:2-8) சாராளின் பகுதியை விளக்கவும். இந்த கதையை சொல்லும் போது மத்தியான சூரியன், சூடான பாதங்களில் குளிர் தண்ணீர், அந்த ஆகாரத்தின் வாசனை ... இப்படி அநேக விசயங்களைச் சொல்லி பிள்ளைகளின் உணர்வுகளை தூண்டி கதை சொல்ல வேண்டும்.<br>ஆகாரம் உண்டப்பின், அந்த 3 விருந்தினர்களும் அடுத்த வருடத்தில் சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என செய்தி சொன்னார்கள். (ஆதியாகமம் 18:9,10) எப்படி இந்த விருந்தினர்களுக்கு இந்த செய்தி தெரியும்? அந்த விருந்தினர்கள் யார் என்பதை விளக்கவும் - பரலோகத்திலிருந்து வந்த தேவ செய்தியாளர்கள் - ஒருவர் கர்த்தராகிய இயேசு, மற்ற இருவரும் தேவ தூதர்கள். இந்த செய்தியை கேட்ட ஆபிரகாமுக்கு எப்படியிருந்திருக்கும் என்பதை குறித்து ஆலோசியுங்கள். தேவ வாக்குறுதி வெகு சீக்கிரத்தில் நிறைவேறப் போகிறது.<br>சாராள் சிரித்ததற்கு காரணம் அது முடியாத காரியம் என நினைத்ததுதான். ஆனால் கர்த்தரோ முடியாதவைகளை முடிய செய்கிறவர். (ஆதியாகமம் 18:11-15) சாராள் சிரித்தவுடன் தேவன் எப்படி உணர்ந்திருப்பார் என்பதை பற்றி ஆலோசிக்கவும்.<br>ஒரு வருடம் கழித்து சாராளுக்கு ஒரு மகன் பிறந்தான். (ஆதியாகமம் 21:1-7) அவர்குள் அனுபவித்த மகிழ்ச்சியைக் குறித்து சிந்திக்கவும். தேவன் தனது வாக்குறுதியை நிறைவேற்றினாரா? 2ம் நிலை பிள்ளைகளுக்கு ஈசாக்கின் பெயருக்கு அர்த்தம் என்னவென்று விளக்கவும். (சிரிப்பு).<br>தேவன் நமக்கு அளித்த எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வல்லவர். அவரால் முடியாதது ஒன்றுமில்லை – தேவன் இன்றும் அப்படிப்பட்டவர்! எவ்வளவு ஆச்சரியம்!!<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக : FBI – Abraham and the three strangers. |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுத்தரவும் : ஆதியாகமம் 18:14 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. விருந்தினர்கள் வந்தது எந்த சமயம்?<br>2. ஆபிரகாம் அப்பொழுது எங்கிருந்தான்?<br>3. ஆபிரகாம் சாராளைப் பார்த்து என்ன சொன்னான்?<br>4. அவர்கள் என்னவெல்லாம் சாப்பிட்டார்கள்?<br>5. செய்தியாளர்கள் செய்தி சொல்லும்போது சாராள் எங்கிருந்தாள்?<br>6. ஏன் சாராள் சிரித்தாள்?<br>7. இன்னும் எவ்வளவு காலம் கழித்து சாராள் மகனை பெறப்போகிறாள்?<br>8. அந்த குழந்தைக்கு என்ன பெயர் இடப்பட்டது?<br>9. ஆபிரகாமும் சாராளும் சந்தோ'மாயிருந்ததற்கு 2 காரணங்கள் கூறுக.<br>இந்த சம்பவத்தை நடித்துக் காட்டச் சொல்லுக. |

# A 6 – கதை 1

ஆபிரகாம் தேவனுக்கு செவி கொடுக்கிறான் - இந்த கதை எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை நேசிப்பதை பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. ஆபிரகாம் எல்லாவற்றிற்கும், எல்லாரிலும் மேலாக தேவனை நேசித்தான்<br>2. நாமும் தேவனை நமது முழு இருதயத்தோடு நேசிக்க வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** ஆதியாகமம் 22:8 அல்லது உபாகமம் 6:5<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 22:1-9 |
| **அறிமுகப்படுத்துக:** | பிள்ளைகள் தங்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு காரியத்தை உங்களிடம் பகிரச் சொல்ல வேண்டும் - உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமானது எது? ஏன் அது முக்கியம்?<br>அந்த காரியங்களை தியாகம் செய்ய சொன்னால் எப்படியிருக்கும் என்று சொல்லச் சொல்லுங்கள். – அந்த காரியத்தை தியாகம் செய்வீர்களா? அது பறிக்கப்பட்டால் எப்படி உணர்வீர்கள்? இன்றைய கதை ஆபிரகாம் தனக்கு இருப்பதிலேயே அதிக முக்கியமானதொன்றை தியாகம் செய்வதைப் பற்றியது. |
| **கற்றுத்தருக:** | தேவன் ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் வாக்குறுதி அளித்து அவர்களுக்கு ஒரு குமாரனை கொடுத்தார். அவன் பெயர் ஈசாக்கு. அவனை அதிகமாக நேசித்தார்கள். (ஆதியாகமம் 21:1-3)<br>ஒரு நாள் தேவன் ஆபிரகாமோடு ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு மோரியா என்னும் மலைக்கு வரச்சொன்னார். ஈசாக்கு ஒரு இளைஞனாக இருந்திருக்கக்கூடும். தேவன் ஆபிரகாமுடைய மகனான ஈசாக்கை தனக்கு பலியிட வேண்டும் என விரும்பினார். தேவன் ஆபிரகாம் தன்னை அதிகமாய் நேசிக்கிறானா என சோதிக்க நினைத்தார். ஆபிரகாம் தேவனை நம்பி இந்த காரியத்தை செய்ய சம்மதித்தான். (ஆதியாகமம் 22:1-2)<br>ஆபிரகாம் தன் முழு இருதயத்தோடு தேவனை நேசித்தான். இப்பொழுது அவன் தேவனுக்கு செவி சாய்த்து அவருக்கு கீழ்ப்படிய நினைத்தான். அது கடினமான காரியமாயிருந்தாலும் அதை செய்வதற்கு சம்மதித்தான்.<br>அதிகாலையிலே, ஆபிரகாம் தனது பயணத்திற்கு தேவையான எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்தினான். புலி செலுத்த விறகு கட்டைகளை வெட்டி எடுத்துக்கொண்டான். இரண்டு வேலைக்காரரையும் கழுதையையும் எடுத்துக்கொண்டான். (ஆதியாகமம் 22:1-2)<br>மூன்று நாளைக்கு பின்னர், தேவன் தெரிந்தெடுத்த அந்த மலையை வந்தடைந்தார்கள். அந்த 2 வேலைக்காரர்களையும் ஆபிரகாம் அங்கே தாங்கள் திரும்ப வரும் வரை காத்திருக்கச் சொன்னான். ஈசாக்கு விறகு கட்டைகளை சுமந்து கொண்டான், அவன் தகப்பன் கத்தியையும், நெருப்பையும் சுமந்து கொண்டான். (ஆதியாகமம் 44:4-6)<br>அவர்கள் மலையேற ஆரம்பித்த பின்பு, ஈசாக்கு தன் தகப்பனைப் பார்த்து, விறகு இருக்கிறது, நெருப்பு இருக்கிறது, ஆனால் தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என கேட்டான். அதற்கு ஆபிரகாம் “தேவன் தமது பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்” என சொன்னான். (ஆதியாகமம் 22:7-8)<br>ஆபிரகாம் தேவனுக்கு கீழ்ப்படிந்தான் ஏனெனில் அவன் அவரை நேசித்தான். தேவனை நாம் நமது முழு இருதயத்தோடு நேசித்து அவர் சொல்வதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக : FBI – Abraham and Isaac. |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுத்தரவும் : ஆதியாகமம் 22:8 அல்லது உபாகமம் 6:5 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. ஆபிரகாமின் குமாரனின் பெயர் என்ன?<br>2. தேவன் ஆபிரகாமை போகச்சொன்ன மலையின் பெயர் என்ன?<br>3. ஆபிரகாம் தன்னோடு எத்தனை வேலைக்காரரைக் கொண்டு சென்றான்?<br>4. ஆபிரகாம் தன்னோடு கொண்டுபோன மிருகம் எது?<br>5. அந்த மலை சென்றடைவதற்கு அவர்களுக்கு எத்தனை நாள் சென்றது?<br>6. “தமக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்” என ஆபிரகாம் யாரைக் குறித்துச் சொன்னான்?<br>7. எல்லாவற்றையும், எல்லாரிலும் அதிகமாய் ஆபிரகாம் நேசித்தது யாரை?<br>8. நாம் யாரை நமது முழு இருதயத்தோடு நேசிக்க வேண்டும்? |

## A 6 – கதை 2

ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தான் - இந்த கதை ஈசாக்கின் இடத்தை ஒரு ஆட்டுக்கடா எடுத்துக்கொண்டதை பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. ஈசாக்குக்கு பதிலாக தேவன் ஒரு ஆட்டுக்கடாவை தந்தார்.<br>2. இயேசு நமக்காக சிலுவையில் மரித்தப்போது நமது இடத்தை எடுத்துக்கொண்டார்.<br>**முக்கிய வசனம்:** கலாத்தியர் 2:20<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 22:1-9 |
| **அறிமுகப்படுத்துக:** | பிள்ளைகள் தாங்கள் செய்த தவறுக்காக தண்டிக்கப்பட போகும் போது எப்படி உணர்வார்கள் என கேட்கவும்.<br>அந்த நேரம் பார்த்து யாரோ ஒருவர் அந்த தண்டனையை தங்கள் மேல் ஏற்றுக்கொண்டால் எப்படி உணர்வார்கள் என கேட்கவும்<br>இந்த நாளின் கதையிலே ஈசாக்குக்கு பதிலாக ஏதோ ஒன்று அவன் இடத்தை எடுத்துக்கொள்ளப் போகிறது என விளக்கவும். |
| **கற்றுத்தருக:** | கடைசியிலே ஆபிரகாமும் ஈசாக்கும் மலையின் உச்சிக்கு வந்தார்கள், அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினார்கள். அதிலே ஈசாக்கு கிடத்தப்பட்டான் (ஆதியாகமம் 22:9-10)<br>ஆபிரகாம் ஈசாக்கை பலி செலுத்த புறபட்டப்போது, ஒரு தூதன் பரலோகத்திலிருந்து கூப்பிட்டு தன் மகனுக்கு எந்த தீங்கும் செய்ய வேண்டாம் எனச் சொன்னார். ஆபிரகாம் இப்பொழுது தான் தேவனை எவ்வளவு நேசிக்கிறான் என்பதைக் காட்டினான். (ஆதியாகமம் 2:11-12)<br>ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்து பார்த்தப்போது, அங்கு ஒரு ஆட்டுக்கடா முட்களில் சிக்கிக்கொண்டிருந்தது. அந்த ஆட்டுக்கடாவை தனது மகன் ஈசாக்குக்கு பதிலாக பலிபீடத்தில் வைத்தான். (ஆதியாகமம் 22:13)<br>ஈசாக்கின் இடத்தை அந்த ஆட்டுக்கடா எடுத்துக்கொண்டதைப் பற்றி அவர்கள் இருவரும் எப்படி உணர்ந்திருப்பார்கள்?<br>இயேசு சிலுவையில் மரித்துப்போது அவர் நமது இடத்தை எடுத்துக்கொண்டார். நாம் எல்லாரும் தவறுகள் செய்திருக்கிறோம். ஆனால் நமக்காக அந்த தவறுகளுக்கான தண்டனைகளை இயேசு எடுத்துக்கொண்டார்.<br>இயேசு நம்மை நேசித்ததினாலே நமது பாவங்களுக்கான தண்டனைகளை அனுபவித்து நாம் அழிந்து போகாமலிருக்க, நமக்கு பதிலாக மரித்தார்.<br>இயேசு உன்னை இவ்வளவு நேசித்து நமக்காக தன் உயிரையே தந்ததைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?<br>நாம் இயேசுவை நேசிக்கிறோம் என்பதை நாம் எப்படி காட்டப்போகிறோம்?<br>பைபிள் டைம் பாட வேலைகளை முடிக்கவும்.<br>காட்டுக: FBI – Abraham and Isaac. |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தை கற்றுத்தருக : கலாத்தியர் 2:20 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. ஆபிரகாம் கட்டின அந்த பலிபீடம் எங்கேயிருந்தது?<br>2. அதை கட்டுவதற்கு உபயோகப்படுத்தப்பட்டது எது?<br>3. யார் பரலோகத்திலிருந்து கூப்பிட்டது?<br>4. ஆபிரகாமிடம் தேவதூதன் சொன்னது எது?<br>5. ஆபிரகாம் தேவனுக்கு காட்டியது எது?<br>6. பலிபீடத்தில் ஈசாக்கின் இடத்தை எடுத்துக்கொண்டது எது?<br>7. நமது இடத்தை சிலுவையிலே எடுத்துக்கொண்டது யார்?<br>8. ஏன் இயேசு சிலுவையிலே மரித்தார்? |

# A 6 – கதை 3

தேவன் உதவுகிறார் - இந்த கதை தேவன் வழிகாட்டுவதை பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. வேலைக்காரன் தேவனிடம் உதவி கேட்டான், தேவன் அவனுக்கு உதவினார்.<br>2. நாம் கேட்டாலும் தேவன் நமக்கு உதவுவார்.<br>**முக்கிய வசனம்:** ஆதியாகமம் 24:27 அல்லது மத்தேயு 7:7<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 24:1-28 |
| **அறிமுகப்படுத்துக:** | தங்களுக்கு உதவி செய்த மக்களை நினைவுகூறச் சொல்லி பிள்ளைகளுக்கு சொல்லவும் - உங்களுக்கு உதவி செய்வது யார்? எந்தெந்த விசயங்களிலே உங்களுக்கு அவர்கள் உதவி செய்வார்கள்? அவர்கள் உங்களுக்கு உதவி செய்வது உங்களுக்கு எப்படி இருக்கும்?<br>பிள்ளைகள் மற்றவர்களுக்கு உதவி செய்த சந்தர்ப்பங்களைக் குறித்து பேச அனுமதியுங்கள்.<br>இந்த நாளின் கதையிலே தேவன் ஒரு நபருக்கு உதவி செய்கிறார் என்பதை விளக்குங்கள். |
| **கற்றுத்தருக:** | ஆபிரகாம் மிக வயதானவன், ஆனால் அவன் மரிப்பதற்கு முன்னமே தன் மகனான ஈசாக்குக்கு சந்தோசமான திருமணம் நடக்க வேண்டும் என்பதில் உறுதியாயிருந்தான். எனவே தனது தலைமை வேலைக்காரனுக்கு தன் குமாரனுக்கு ஒரு மனைவியை கண்டுபிடிக்க அறிவுறைகளை வழங்கினான். தேவனை நம்பி சரியான பெண்ணை கண்டடைவதற்கு அவரை சார்ந்து கொள்ள சொன்னான். (ஆதியாகமம் 24:1-9)<br>அந்த வேலைக்காரன் இதைக் குறித்து எப்படி உணர்ந்திருப்பான்?<br>ஆபிரகாமின் ஒட்டகங்களில் 10 ஒட்டகங்களை எடுத்துக்கொண்டு அந்த வேலைக்காரன் புறப்பட்டான். அநேக நாட்கள் பிரயாணப்பட்டு போய் நாகோரின் கிணற்றண்டைக்கு வந்தான். அது சாயங்கால வேளையாயிருந்தது, அநேக இளம்பெண்கள் அங்கு தண்ணீர் கொண்டு போக வந்தார்கள். (ஆதியாகமம் 24:10-11)<br>அந்த வேலைக்காரன் தேவனை நோக்கி ஜெபம் செய்து வருகிற பெண்களில் யார் தனது எஜமானுக்கு மனைவியாகக்கூடும் என உதவி கேட்டான். எந்த பெண் தான் தண்ணீர் கேட்கும்போது, தனக்கும், ஒட்டகங்களுக்கும் தண்ணீர் தருகிறாளோ அவளே ஈசாக்குக்கு மனைவி என தேவனிடம் அடையாளம் கேட்டுக்கொண்டான். (ஆதியாகமம் 24:12-14)<br>அப்பொழுது ஒரு அழகான பெண் கிணற்றண்டைக்கு வந்தாள். அவளது பெயர் ரெபேக்காள். அவன் அந்த பெண்ணிடம் தண்ணீர் கேட்டபோது, அவனுக்கும் அந்த ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுத்தாள். (ஆதியாகமம் 24:22-27)<br>ஆபிரகாம் கொடுத்த பரிசு பொருட்களை அவளிடம் கொடுத்தப்பின்னர், அவள் வீட்டில் தங்க இடமுண்டு என்பதை அறிந்து தேவனுக்கு நன்றி செலுத்தினான் (ஆதியாகமம் 24:22-27)<br>எப்பொழுதாவது ஒரு கடினமான வேலை உனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா?<br>வேலைக்காரன் யாரிடத்தில் உதவி கேட்டான்?<br>நாம் நமக்கு உதவும் படி யாரை கேட்கலாம்? தேவனை கேட்கலாம், அவர் நமக்கு உதவுவார்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்.<br>காட்டுக : FBI – Abraham and Isaac. |
| **கற்றுக்கொள்ளுக:** | |
| **ஞாபகப்படுத்துக:** | 1. ஈசாக்குக்கு ஒரு மனைவியை தெரிந்தெடுக்க சென்றது யார்?<br>2. எத்தனை ஒட்டகங்களை வேலைக்காரன் எடுத்து சென்றான்?<br>3. வேலைக்காரன் எந்த இடமட்டும் போனான்?<br>4. அது எந்த மணி நேரம்?<br>5. சுரியான பெண்ணை தெரிந்தெடுக்க யாருடைய உதவியை வேலைக்காரன் நாடினான்?<br>6. கிணற்றண்டை வந்த அந்த பெண்ணின் பெயர் என்ன?<br>7. வேலைக்காரனுக்கு உதவியாக அவள் செய்தது என்ன?<br>8. தேவன் தனக்கு உதவி செய்தார் என அறிந்த வேலைக்காரன் செய்தது என்ன? |

# A 6 – கதை 4

தேவனுடைய தெரிந்தெடுப்பு - இந்த கதை ஈசாக்கு ரெபேக்காளை திருமணம் செய்வதைப்பற்றியது

| | |
|---|---|
| | ***நாம் கற்றுக்கொள்வது:***<br>1. ரெபேக்காளும் ஈசாக்கும் தேவனுடையத் திட்டத்தை பின்பற்றியதால் அவர்கள் மிகவும் சந்தோ'ப்பட்டார்கள்.<br>2. நாம் தேவனை நம்பி அவரது வழிகளை பின்பற்றினால் நாமும் சந்தோ'மாக இருக்கலாம்.<br>**முக்கிய வசனம்:** சங்கீதம் 144:5<br>**வேத பகுதி :** ஆதியாகமம் 24:28-67 |
| **அறிமுகப்படுத்துக:** | என்றாவது திருமணத்திற்கு பிள்ளைகள் போனதுண்டா என பிள்ளைகளை கேட்கவும். – யார் திருமணம் செய்தார்கள்? அவர்கள் அணிந்திருந்த உடை என்ன? திருமணத்தில் என்ன நடந்தது? மணமக்கள் சந்தோ'மாயிருந்தார்களா?<br>வேதாகம நாட்களில் நடந்த ஒரு திருமணத்தைப் பற்றி தான் இன்று நாம் கேட்கப்போகிறோம் என பிள்ளைகளுக்கு விளக்கவும். ஒரு வேளை உங்கள் நாட்டில் நடக்கும் திருமணங்களை விட இது சற்று வித்தியாசமாக இருக்கலாம். |
| **கற்றுத்தருக:** | இதுவரை நடந்த சம்பவத்தை ஞாபகப்படுத்தவும்<br>ரெபேக்காள் தன் வீட்டாருக்கு அறிவிக்க ஓடினாள். அவளது சகோதரன் லாபான், கிணற்றண்டைக்கு ஓடி, வேலைக்காரனை வீட்டிற்கு அழைத்து வரவேற்றான். ஆனால் வேலைக்காரன் சாப்பிடுவதற்கு முன்னால், தான் ஏன் வந்தான் என்பதை முதலில் அறிவித்தான். (ஆதியாகமம் 24:28-49)<br>ஈசாக்கின் வேலைக்காரனை தேவன் தான் வழிநடத்தினார் என்பதை ரெபேக்காளின் தந்தையும், சகோதரன் லாபானும் ஒப்புக்கொண்டார்கள். எந்த தாமதமும் செய்யாமல் ரெபேக்காளை வேலைக்காரனோடு போக அனுமதித்தார்கள். அந்த வேலைக்காரன் தேவன் தனது ஜெபத்தை கேட்டதற்காய் தேவனை துதித்தான். பின்பு அவன் ரெபேக்காளுக்கும், அவள் வீட்டாருக்கும் அநேகம் வெகுமதிகளைக் கொடுத்தான். (ஆதியாகமம் 25:50-53)<br>காலையில் ரெபேக்காள் வேலைக்காரனோடு போய் ஈசாக்கை திருமணம் செய்ய சம்மதமா எனக் கேட்டார்கள், அப்பொழுது ரெபேக்காள் சம்மதித்தாள். (ஆதியாகமம் 24:54-61) ரெபேக்காளுக்கு எப்படி இருந்திருக்கும்? (ஒரு வேளை சற்று உணர்ச்சிவசமாக இருந்திருப்பாள். ஏனென்றால் அவளுக்கு ஈசாக்கு யாரென தெரியாது, ஆனால் தேவனுடைய சித்தத்தை அவள் விசுவாசித்ததினாலே வேலைக்காரனோடு அங்கு செல்ல சம்மதித்தாள்)<br>ஈசாக்கும் ரெபேக்காளும் மிகவும் சந்தோ'மாக இருந்தார்கள் ஏனென்றால் தங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டத்தை அவர்கள் நம்பினார்கள்.<br>பைபிள் டைம் பாட வேலையை முடிக்கவும்<br>காட்டுக : FBI – A wife for Isaac. |
| **கற்றுக்கொள்ளுக:** | முக்கிய வசனத்தைக் கற்றுத்தரவும் சங்கீதம் : 144:5 |
| **ஞாபகப்படுத்துக:** | 1. ரெபேக்காளின் சகோதரனின் பெயர் என்ன?<br>2. அந்த வேலைக்காரன் சாப்பிடுவதற்கு முன்னே செய்தது என்ன?<br>3. ஈசாக்கின் மனைவயிாக ரெபேக்காளை தருவதற்கு அவளது குடும்பத்தினர் ஏன் சம்மதித்தார்கள்?<br>4. ரெபேக்காளுக்கும், அவள் குடும்பத்திற்கும் வேலைக்காரன் தந்தது என்ன?<br>5. வேலைக்காரனை ரெபேக்காளிடத்தில் வழிநடத்தினது யாரென அவர்கள் கூறினார்கள்?<br>6. வேலைக்காரனோடு ரெபேக்காள் எப்பொழுது சென்றாள்?<br>7. வேலைக்காரனும், ரெபேக்காளும் வந்து கொண்டிருந்த போது வயல் வெளிகளிலே நடந்து கொண்டிருந்தது யார்?<br>8. ஈசாக்கும் ரெபேக்காளும் ஏன் சந்தோ'மாக இருந்தார்கள்?<br>9. நம்மை சந்தோசமாக வைக்கக்கூடிய ஒரே ஒருவர் யார்? |

**மதிப்பெண் இடுவதற்கான வழிமுறைகள்**

**முதல் நிலை பாடங்கள்:**

ஒவ்வொரு வாரமும் வண்ணமிடவோ அல்லது ஒரு சில வார்த்தைகள் எழுதவோ ஒரு பக்கம் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வாரத்திற்கும் 10 மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டு 4 வாரங்களுக்கு அதிகபட்சம் 40 மதிப்பெண்கள் கொடுக்கப்படும்.

முதல் நிலை பிள்ளைகள் நன்கு வாசிக்க அறியாதவர்களாயிருப்பதினால், அவர்கள் பெற்றோர்கள் / தலைவர்கள் அவர்களுக்கு உதவ வேண்டும்.

ஓவ்வொரு பதிலுக்கும் 2 மதிப்பெண்கள் மற்றும் வண்ணமிட மேதி மதிப்பெண்களும் கொடுக்கப்படும். ஒரு பாடத்திற்கு 10 மதிப்பெண்கள்

**2ம் நிலை பாடங்கள்:**

ஒவ்வொரு வாரத்திற்கும் 2 பக்கங்கள் (புத்தகங்களில் 4)

பாடத்திற்குள்ளேயே கதை இருக்கும். மாணவர்கள் பாடத்திற்குள்ளேயே இருக்கும் சில வார்த்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டும், மற்றும், வண்ணமிடவும், முக்கிய வசனத்தை முடிக்க வேண்டும்.

ஒவ்வொரு வாரத்திற்கும் 20 மதிப்பெண்கள் கொடுக்கப்படும். ஒரு மாதத்திற்கு மொத்தம் அதிகப்பட்சம் 80 மதிப்பெண்கள்

**பைபிள் டைம் மதிப்பெண்கள்**

மதிப்பெண் இட சில ஆலோசனைகள்

ஆசிரியர்கள் முதலில் கீழ்கண்டவற்றை செய்ய வேண்டும்:

ஒவ்வொரு பாடத்தையும் கவனித்து, சரி அல்லது தவறு என்று திருத்த வேண்டும்

சரியாக மதிப்பெண் இட வேண்டும்

டிக் செய்ய வித்தியாசமான வண்ணத்தை உபயோகிக்க வேண்டும்

தவறான பதிலோ அல்லது எழுத்து பிழையோ இருந்தால், அங்கே சரியான பதிலை எழுத வேண்டும். எழுத்து பிழைகளுக்கு மதிப்பெண்களை குறைக்கக்கூடாது.

பாதி சரியான பதில்களும் மதிப்பெண்களை சற்று குறைத்துத் தரவும்.

அந்த மாதத்திற்கான மொத்த மதிப்பெண்களைக் கூட்டி அதற்காக கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் அதை எழுத வேண்டும்.

பிள்ளைகளிடம் சரியான முறையில் மிதமாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் பிள்ளைகளை உற்சாகப்படுத்தி எழுத கொடுக்கப்பட்டிருக்கும் இடத்திலே பிள்ளைகளைப் பற்றி உற்சாகப்படுத்தி எழுத வேண்டும். வண்ணமிடுதலை பற்றியோ, சுத்தத்தைப்பற்றியோ மதிப்பெண் எடுத்ததைப் பற்றியோ பாடங்களை புரிந்து கொண்டதைப்பற்றியோ கமெண்ட் எழுதலாம்.

பல வகையான கமெண்ட்களை எழுதலாம். கேள்விகள், வாக்கியங்கள, கண்காணிப்புகள், உற்சாகம் இன்னும் பல.., ஒவ்வொரு முறையும் வெவ்வேறு வார்த்தைகளை உபயோகியுங்கள், அது சுவாரஸ்யமாக இருக்கும்.

**முதல் நிலை கமெண்ட்கள்:**

"ஏமி – இந்த பாடங்களை நீ துவக்கியது மிக மகிழ்ச்சியை தருகிறது, நீ என்ன செய்கிறாய் என நினைக்கிறேன். நீ வண்ணமிடுவது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நீ பள்ளிக்கு போகிறாயா? அதைப் பற்றி எனக்குச் சொல்லு. சீக்கிரம் நீ சொல்வதை நான் கேட்க வேண்டும்.

அன்று நீ சூப்பராக கலர் அடித்திருக்கிறாய்! கோட்டிற்குள் கலர் அடிப்பது சிரம இருந்ததா? கடைசி பாடத்தில் சில இடங்களில் மட்டும் நீ கலர் அடிக்கவில்லை.

**ஆவிக்குரிய கமெண்ட்கள்:**

"நல்லது சாரா, இயேசு யவீருவுக்கு உதவி செய்த பின்பு அவன் எவ்வளவு சந்தோ'மடைந்தான் பார்த்தாயா?!

மிக அருமையான பதில்கள்! இயேசு மரிக்கும் கதை சற்று வருத்தமளிப்பது தான், ஆனால் அவர் உயிரோடெழுந்தது மிக சந்தோசம்.

**இரண்டாம் நிலை கமெண்ட்கள்:**

நல்ல பதில்கள் ஜோவன்னா! உனது டீச்சர் மிகவும் சந்தோசப்பட்டிருப்பார்கள் என நினைக்கிறேன்.

உனக்கு சீக்கிரம் பிறந்த நாள் வரப்போகிறது கார்கர்! ஏதாவது விசேசம் அன்றைக்கு உண்டா?

சந்தோசமாயிரு!

நீ மிகவும் கடினமாய் உழைத்திருக்கிறாய்!! சின்ன சின்ன தவறுகள் இருந்தாலும், நன்றாக தான் செய்திருக்கிறாய். பதில்களை எழுதி முடித்த பின்பு ஒரு தடைவ செக் செய்

**ஆவிக்குரிய கமெண்ட்கள்:**

குழந்தை இயேசுவுக்கு நீ இட்ட வண்ணம் மிக அழகு. தேவன் நமக்காக அவரை இந்த உலகத்தில் அனுப்பியது மிக அருமையதனது இல்லையா!

© Bible Educational Services 2015

www.besweb.com